

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 241 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(26.05.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 05, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## உஷ்



மத்திய, தென், ஊவா, வடமத்திய மாகாணங்களின் ஆளுநர்களை பதவியிலிருந்து நீக்கக் கூடாதென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணிலிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல்.

மத்திய, வடமத்திய மாகாணங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் இருவரை நியமிக்க ரணில் தீர்மானித்திருந்தார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் இந்த மாகாணங்களுக்கு ஆளுநர்களை புதிதாக நியமிப்பாரென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடக்கு, கிழக்கில்
# தொல்லியல் திணைக்கள அளவீடுகளை நிறுத்துக!
### அமைச்சர் விதுர நேற்று உத்தரவு



02 பக்கம்

## சுரேஷ் மீது ஒழுக்காற்று விசாரணை
### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

நமது நிருபர்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான அரசாங்கத்தின் யோசனைக்கு ஆதரவு தெரிவித்த வடிவேல் சுரேஷுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி நேற்று (25) அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்றையதினம் கலந்துரையாடப்பட்டதாக கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.



பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜனக ரத்நாயக்கவை நீக்குவதற்கான வாக்கெடுப்பு...

02 பக்கம்

## இரகசியமாக திறக்கப்பட்டது தையிட்டி 'திஸ்ஸ' விகாரை
### கொதித்தெழுந்த மக்கள் எதிர்ப்புக் கோஷம்



யாழ். செய்தியாளர்

யாழ்ப்பாணம், தையிட்டியில் 'திஸ்ஸ' விகாரை அமைக்கப்படுகின்றமைக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டு போராட்டங்கள் நடத்திவருகின்ற நிலையில் நேற்று (25) அதிகாலை...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



மத்திய வங்கி மோசடி செய்தவர்களே தங்களுக்கு ஒண்டும் தெரியாது என்றுதானே சொன்னாங்கள்... அப்படி பார்க்கும்போது பையில என்ன இருந்ததென்று தெரியாதென புத்தளம் எம்.பி. சொல்லுறதில புதுமையில்லையே..!

## வருட இறுதியில் ஒற்றை இலக்கமாகும் பண வீக்கம்
### மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

நா. தினுஷா

நாட்டின் சகல தரப்பினரதும் நலனுக்காக பொருளாதாரத்தை மீண்டும் மீட்டெடுப்பதற்கு மத்திய வங்கி கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எழுபது சதவீதமாக இருந்த பணவீக்கம்...

02 பக்கம்



## பரிதாப நாடுகளில் இலங்கைக்கு 11 ஆவது இடம்

10 பக்கம்

## அரசுக்கு நற்சான்று வழங்கினார் சப்ரி
### இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய பெருமிதம்



நா. தினுஷா

தனக்கு உதவி புரியாததாலேயே அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் குறிப்பிடுவதை வரவேற்கிறோம். அவரின் இந்த கருத்து...

02 பக்கம்



## "நான் அவன் இல்லை"
### விளக்கம் கூறுகிறார் சப்ரி எம்.பி.

02 பக்கம்

## சப்ரி எம்.பிக்கு எதிராக நடவடிக்கை அவசியம்
### சபாநாயகரை வலியுறுத்தியது எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழு

நா. தினுஷா

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கடிதமொன்றை நேற்று (25) சமர்ப்பித்தது.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் சட்டவிரோதமாக மூன்று கிலோவுக்கும் அதிகமான தங்கம்,

02 பக்கம்

## சட்டத்தரணி ஹமீட் காலமானார்



சாய்ந்தமருது செய்தியாளர்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் சட்ட முதுமாணி வை.எல்.எஸ்.ஹமீட் நேற்று (25) வியாழக்கிழமை அதிகாலை தனது 61 ஆவது வயதில் காலமானார்.

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட வை.எல்.எஸ்.ஹமீட், கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுகவீனமுற்று, கொழும்பு தெற்கு களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே காலமாகியுள்ளார். மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையான இவர் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் காதர் முகைதீனின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக கடமையாற்றி வந்த நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்...

02 பக்கம்

## ஆசியாவை பிளவுபடுத்தும் முயற்சிகளுக்கு எதிர்ப்பு
### ஜனாதிபதி ரணில் ஜப்பானில் தெரிவிப்பு




உலகளாவிய பொருளாதார சக்தியாகவும் ஆற்றல்மிக்க பிராந்தியமாகவும் ஆசியா மாறியுள்ளதென தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வல்லரசு நாடுகளுக்கிடையில் தெரிவுக்கான அழுத்தத்துக்கு உடன்படப்போவதில்லையெனவும் ஆசியாவை பிளவுபடுத்தும் முயற்சிகளை எதிர்ப்பதாகவும் ஜப்பானில் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க...

02 பக்கம்

## இணையவழி மிரட்டல்களால் பாலியல் தூண்டல் அதிகரிப்பு
### சிறுவர், இளம்பராயத்தினர் பாதிப்படைவதாக வைத்தியர்கள் எச்சரிக்கை

நா. தினுஷா

இணையவழி மிரட்டல்கள் சிறுவர்களையும் இளம்பராயத்தினரையும் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தத் தூண்டுவதாகவும் அதனால் தற்கொலைகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் சிறுவர் மற்றும் கட்டிளமைப்பருவ உளவியல் ஆலோசகர் வைத்தியர் தர்ஷனி ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

ஆகவே, சிறுவர்களுக்கு தொலைபேசியைப் பயன்படுத்தக் கொடுக்கும்போது அதிக அவதானத்துடன் செயற்படுமாறும் கற்றல் தவிர்ந்த வேறு தேவைகளுக்காக சிறுவர்களிடம் தொலைபேசிகளை கொடுப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் சுட்டிக்காட்டினார்.

02 பக்கம்

## ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன்
### கட்சிகளின் ஆதரவு அவசியமில்லையென்கிறார் ஜனக



நா. தினுஷா

பாராளுமன்றத்தில் எனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு கிடைத்த ஆதரவு எனது தோல்வியல்ல. நாட்டு மக்களுக்கு கிடைத்த தோல்வியாகும். இனி என்னால் சுதந்திரமாக அரசியலில் ஈடுபட முடியும். நாட்டில் தற்போதுள்ள நிலைமையை மாற்றியமைக்க...

02 பக்கம்

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில்
# தோண்டி எடுக்கப்பட்டது தினேஷ் ஷாப்டரின் சடலம்




படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே

நா. தினுஷா

மர்மமான முறையில் உயிரிழந்த பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக நேற்று (25) பொரளை பொது மயானத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டது. கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய மற்றும்...

02 பக்கம்

## இணையவழி...

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையிலான நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

இளைஞர்களுக்கு மூளையின் பின்புறமே முதலில் விருத்தியடையும். மூளையின் பின்புறமாகவுள்ள பகுதியிலேயே புதிய யோசனைகள், புரிந்துணர்வு என்பன தோற்றம் பெறுகின்றன. அந்தப் பகுதியின் விருத்திச் செயற்பாடு காலதாமதமாகும்போது சிந்தனை செய்யும் சக்தி குறைவடையும்.

இளைஞர்களாகும்போதும் வீடியோ விளையாட்டுகளில் ஈடுபடும்போதும் அதிலிருக்கும் ஆர்வம் மேலும் அதிகரிக்கும். முதியவரானாலும் அந்த குணாதிசயங்களுடனேயே அவர்கள் இருப்பார்கள்.

இந்நிலையில், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும்போது பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். புரிந்துணர்வு சிந்தனைகள் பின்னடைவைச் சந்திக்கும்.

அதுமாத்திரமல்லாமல், அவ்வாறானவர்களின் சமூகத் திறன்கள் பெருமளவில் வீழ்ச்சியை சந்திக்கும். இவ்வாறு சிந்தனைகளும் தொடர்பாடல்களும் குறுகிய வட்டத்திலிருக்கும்போது சமூக தொடர்புகள் விருத்தியடையாது. சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்பற்ற விடயங்களும் தொலைபேசிகளில் இருக்கின்றன. அவை தற்கொலை வரையில் தூண்டுதலை ஏற்படுத்தும் தன்மை கொண்டவை. ஆனால், அதை அவர்கள் தவறாகக் கருதமாட்டார்கள்.

அதேபோன்ற இணையவழி மிரட்டல்கள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் பல்வேறு தரப்பினருக்கும் பகிரப்படுகின்றன. யார் இதனைச் செய்கிறார்கள் என்பதை கண்டுபிடிப்பது கடினம். அவ்வாறு இதனை நிறுத்தினாலும், இந்த மிரட்டல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட பாதிப்புகளினால் பின்னர் தற்கொலை செய்துகொள்ளும் சிறுவர்கள் அல்லது இளைஞர்களை அவதானித்திருக்கிறோம்.

போலிக் கணக்குகளினூடாக குழுக்களை உருவாக்கி தேவையில்லாத தொடர்புகளை உருவாக்கிக்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட சிறுவர்கள் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. அதன்போது நிர்வாணப் புகைப்படங்களை எடுத்து அதனை வைத்துக்கொண்டு மிரட்டி தொடர்ந்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆகவே, அவை தற்கொலை போன்ற முடிவுகளையே தூண்டுகின்றன. அதுமாத்திரமன்றி, 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்குவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டார்.

## இரகசியமாக...

5.30 மணியளவில் இரகசியமாக திறந்துவைக்கப்பட்டது. இதனையடுத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் கோஷம் எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தென்னிலங்கையில் இருந்து அழைத்துவரப்பட்ட மக்களின் பங்குபற்றலுடன் தையிட்டி விகாரை திறந்து வைக்கப்பட்டதாக கிராமவாசிகள் தெரிவித்தனர்.

"இனப்படுகொலை செய்த இராணுவத்தினருக்கு விகாரை ஒரு கேடா, இராணுவமே வெளியேறு, கொலைக் குற்றவாளிக்கு பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவியா, கால்களை உடைப்பதும் தொலைபேசிகளை களவாடுவதும் பொலிஸாரின் கடமையா, தையிட்டி எங்கள் சொத்து" என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோஷமிட்டனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

## ஆசியாவை...

டோக்கியோவில் நடைபெற்ற ஆசியாவின் எதிர்காலம் குறித்த நிக்கேய் மாநாட்டில் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலக சனத்தொகையில் 60 வீதமானவர்களின் இல்லமாகவும் உலக வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்ற உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாகவும் இருக்கும் ஆசியாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். சீனாவின் மீட்சி, இந்தியாவின் உள்நாட்டு கேள்வி, ஜப்பான் மற்றும் தென்கொரியா போன்ற வளர்ந்த பொருளாதாரங்களின் பங்களிப்பின் உதவியால் பிராந்தியத்தில் தொடர்ச்சியான வளர்ச்சியின் சாத்தியக்கூறுகளையும் அவர் எடுத்துரைத்தார்.

ஆசியா எதிர்கொள்ளும் மூன்று முக்கிய சவால்களை எடுத்துரைத்தார். ஜனநாயக விழுமியங்கள், மனித உரிமைகள், காலநிலை மாற்றம், வர்த்தக ஒருங்கிணைப்பு ஆகியவை முக்கிய சவால்கள் என்று சுட்டிக்காட்டிய அவர், ஆசிய நாடுகளில் உள்ள மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு அரசியல் முறைகள் மற்றும் வரையறைகளை மதிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

ஆசியா உலகளாவிய பொருளாதார சக்தியாகவும் மிகவும் ஆற்றல்மிக்க பிராந்தியமாகவும் மாறியுள்ளது என்றும் அதன் பொருளாதாரம் ஏற்கனவே ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவுடன் ஒப்பிடத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

ஆசிய நாடுகளின் வெப்பநிலை உயர்வு, கடுமையான வானிலை நிலைமைகள் மற்றும் கடல் மட்ட உயர்வு, ஆசிய நாடுகளின் வாழ்வாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதியை பாதிக்கும் என வலியுறுத்தினார்.

வர்த்தக ஒருங்கிணைப்பு, கடன் நிலைத்தன்மை குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி விக்கிரமசிங்க, ஆசிய நாடுகள் எதிர்கொள்ளும் அபாயங்கள் குறித்தும் உலக வர்த்தக அமைப்புடன் விதிகள் அடிப்படையிலான பலதரப்பு வர்த்தக முறையை பராமரிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தியதோடு பொருளாதார தலையீடுகள் மற்றும் பிரிவினை ஏற்படுத்தல் என்பவற்றை நிராகரித்தார்.

வல்லரசு நாடுகளுக்கு இடையிலான தெரிவுக்கான அழுத்தத்துக்கு ஆசியா உடன்படாது என்று தெரிவித்த ஜனாதிபதி, ஆசியான் நாடுகளும் சீனாவும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதை எடுத்துக்காட்டியதுடன், ஆசியாவைப் பிளவுபடுத்தும் முயற்சிகளை எதிர்ப்பதாகவும் கூறினார்.

கோப் 28இல் முரண்பாடுகளை முறியடித்த ஒருங்கிணைந்த ஆசியக் குரல் முன்வைக்கப்பட வேண்டும் என்றும் இந்த மாநாட்டின் வெற்றியானது பிரதான ஆசிய நாடுகளிடையே ஒருமித்த கருத்திலேயே தங்கியுள்ளது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிக்கேய் மாநாட்டில் உரையாற்றும் போது கூறினார்.

பிளவுகளை நிராகரிப்பதற்கும் பொருளாதார மீள்தன்மை மற்றும் பொருளாதார பாதுகாப்புக்கான உத்திகள் தொடர்பில் ஹிரோஷிமாவில் G7 தலைவர்கள் எடுத்த தீர்மானங்களுக்கு இலங்கை தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம், வளரும் நாடுகள் உட்பட உலகளாவிய பங்காளிகளுடன் உரையாடலில் ஈடுபடுவதற்கும் ஒத்துழைப்பு அணுகுமுறையை கடைப்பிடிப்பதற்கும் G7 குழு தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். அதற்காக உலக வர்த்தக அமைப்பின் விதிகள் அடிப்படையிலான பலதரப்பு வர்த்தக முறையை பின்பற்றுவது பொருத்தமானது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## அரசுக்கு...

அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் கிடைத்த சிறந்த சான்றிதழ் என்பதுடன் தமக்கு கிடைத்த விருது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (25) இடம்பெற்ற நிதிக் கட்டளைச் சட்டங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சட்டவிரோதமாக 3.5 கிலோ கிராம் தங்கம் மற்றும் 91 கையடக்க தொலைபேசிகள் என்பவற்றை நாட்டுக்குள் கொண்டவந்தபோது பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கைதுசெய்யப்பட்டிருந்தார். எங்களுக்குக் கிடைத்த தகவலுக்கமைய அதனை அவர் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார்.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தண்டப்பணம் விதித்து அவரை விரைவாக விடுதலை செய்துவிட்டதாக அநேகமானவர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்தக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நபரொருவர் கைதுசெய்யப்படுவதானால் 24 மணிநேரத்தில் விசாரணைகளை முன்னெடுத்து தண்டப்பணம் விதித்து சம்பந்தப்பட்ட நபர்களை விடுவிக்க வேண்டும். உயர்ந்தபட்ச தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமல்லாமல், தண்டப் பணம் விதித்து அவரை வெளியில் எடுத்து வாக்குகளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சித்ததாக அநேகமானவர்கள் கூறினார்கள். ஆனால், தற்போது தனக்கு அரசாங்கத் தரப்பைச் சேர்ந்த யாரும் உதவி செய்யாததால் நேற்று (நேற்று முன்தினம்) சபையில் முன்வைக்கப்பட்டிருந்த பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததாக அலி சப்ரி ரஹீம் எம்.பியே தெரிவித்துள்ளார்.

அவரின் கருத்துத் தொடர்பில் நான் பெருமை கொள்கிறேன். அவரின் கருத்து அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இதுவே அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் கிடைத்த சிறந்த சான்றிதழாகும். கொள்கையின் அடிப்படையிலேயே நாங்கள் செயற்படுகிறோம். வாக்குக்காக அவரை பிணையில் விடுவித்ததாகக் கூறப்படும் கருத்துகளுக்கு இதனை சிறந்த பதிலடியாகவும் விருதாகவுமே கருதுகிறோம் என்றார்.

## சுரேஷ் மீது...

நேற்று முன்தினம் (24) பாராளுமன்றத்தில் நடத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்.

இது கட்சியின் தீர்மானத்துக்கு எதிரானது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

## சப்ரி எம்.பிக்கு...



கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறிப்பாக இந்தப் பொருட்களை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அவர், தனது பாராளுமன்ற சிறப்புரிமை மற்றும் இராஜதந்திர வெளிநாட்டு பயணங்களுக்கான அனுமதிப் பத்திரம் என்பவற்றை பயன்படுத்தியுள்ளார். இதனூடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வாய்ப்புகள் கடுமையாக மீறப்பட்டுள்ளன.

பாராளுமன்ற சிறப்புரிமைகளை கவனத்தில் கொண்டு இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறாமலிருக்க, இவருக்கு எதிராக விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தயாசிறி ஜயசேகர, ஹர்ஷன ராஜகருணா, உதய கம்மன்பில, வசந்த யாப்பா பண்டார, வீரசுமன வீரசிங்க, அசோக அபேசிங்க, இம்தியாஸ் பாக்கிர் மக்கார், உபுல் கலபத்தி, அஜித் மான்னபெரும, ஹர்ஷ டி சில்வா, மயந்த திசாநாயக்க, கயந்த கருணாதிலக்க, ஹெக்டர் ஹப்புஹாமி, ஜே.சி.அலவத்துவல, காவிந்த ஜயவர்தன உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கையொப்பமிட்டுள்ளனர்.

## பலத்த பாதுகாப்புக்கு...

ஷாப்டரின் மரணம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சட்ட வைத்தியர்கள் ஐவரடங்கிய விசேட குழுவின் முன்னால் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய பிரபல வர்த்தகர் தினேஷ் சாப்டர், பொரளை பொது மயானத்தில் காரொன்றிலிருந்து கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி கைகள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அன்றே உயிரிழந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் கொலை மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களை தடுக்கும் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன்போது அவரின் உயிரிழப்பு தற்கொலையா என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

அதற்கமைய, கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரியவின் உத்தரவின் பேரிலேயே, அவரின் மரணத்துக்கான காரணம் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட சட்ட வைத்தியர்கள் ஐவரடங்கிய விசேட குழுவின் முன்னிலையில் சடலம் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டது.

அவரது சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டு 157 நாட்களின் பின்னரே இவ்வாறு தோண்டியெடுக்கப்பட்டது.

இதன்போது, பொரளை பொது மயானம் உள்ளிட்ட அதனை அண்மித்த பகுதிகளுக்கு நேற்று விசேட பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது. சடலத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தினேஷ் ஷாப்டரின் தந்தை சந்திரா ஷாப்டர், சகோதரர் ஒருவர் மற்றும் உறவினர்களும் வந்திருந்தார்கள். அதேபோன்று, ஷாப்டரின் மரணம் தொடர்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி, அவரின் இறுதிக் கிரியைகளை செய்த தனியார் மலர்ச்சாலையின் உறுப்பினர்களும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

ஒரு மணிநேரம் வரையில் சடலத்தை தோண்டி எடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நீதவான் முன்னிலையில் சடலத்தை தோண்டி எடுத்ததற்கான சாட்சியும் அறிக்கையிடப்பட்டது. அதன் பின்னர் சடலம் இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக எடுத்துச்செல்லப்பட்டது.

## வடக்கு, கிழக்கில்...

*(நமது விசேட செய்தியாளர்)*

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த அளவீட்டுப் பணிகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்தி வைக்குமாறு புத்தசாசன, சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க உத்தரவிட்டார்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுக்குமிடையே நேற்று (25) நடந்த சந்திப்பின்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் அரச தரப்பில் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, அமைச்சின் செயலாளர், தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய திணைக்களங்களின் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்க் கட்சிகள் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தவராசா கலையரசன் ஆகியோரும் ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபனும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் சிங்கள பௌத்தத்துக்கு முன்னதாக தமிழ் பௌத்தம் நிலவியதை சுட்டிக்காட்டிய தமிழ் எம்.பிக்கள், வடக்கு கிழக்கில் பௌத்த சின்னங்கள் பாதுகாக்கப்படுவதை தாம் எதிர்க்கவில்லையென்றும் ஆனால் சைவ வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டு, பௌத்த வழிபாட்டிடங்கள் அமைக்கப்படுவதை எதிர்ப்பதாகவும் தெரிவித்தனர்.

உருத்திரபுரம் சிவன் கோயில், குருந்தூர் மலை, தையிட்டி விவகாரங்கள் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டன.

குருந்தூர் மலையில் நீதிமன்ற தீர்ப்பை மீறியும் தையிட்டியில் பொதுமக்களின் காணிக்குள்ளும் விகாரை கட்டப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியபோது, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் விளக்கங்களை அளித்தார்.

குருந்தூர்மலையில் முன்னர் விகாரை இருந்ததாகவும் வெளிநாட்டு சிங்கள அமைப்புகளின் நிதியுதவியிலேயே விகாரை அமைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு தமிழ்த் தரப்பினர், வெளிநாட்டிலுள்ள தமிழ்த் தரப்பிலிருந்து நிதி திரட்டித் தந்தால், பொலன்னறுவையில் மிகப்பெரிய சைவக்கோயில் கட்ட முடியுமா என கேள்வியெழுப்பினர்.

தமிழ்த் தரப்பினர் தொல்லியல் முக்கியத்துவங்கள் உள்ள பகுதிகளை அபகரிக்க முயல்வதாகவும் அதனாலேயே நில அளவீடு செய்வதாகவும் தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்தார்.

ஆலய காணிகளை தமிழ் மக்கள் அபகரிப்பதில்லையென்பதை இதன்போது தமிழ்த் தரப்பினர் சுட்டிக்காட்டினர்.

தமிழ்த் தரப்பினர் தெரிவித்த விவகாரங்களுக்கு தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நீண்ட விளக்கங்கள் அளிக்க முற்பட்டபோது, கேட்ட கேள்விக்கு மட்டும் பதிலளியுங்கள் என அமைச்சர் விதுர காட்டமாக கூறினார்.

இதன்படி, உருத்திரபுரம் சிவன் ஆலயம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கிலுள்ள சைவ ஆலயங்கள், வழிபாட்டிடங்களில் அளவீட்டு பணிகளை உடனடியாக நிறுத்த அமைச்சர் உத்தரவிட்டார்.

குருந்தூர் மலைக்கு நீதவான் சென்று பார்வையிட்ட பின்னர் மீண்டும் கூடித் தீர்மானம் எடுப்பதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

## சட்டத்தரணி...

1989ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதிலிருந்து அவரது பிரத்தியேக செயலாளராகவும் 1994ஆம் ஆண்டு அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றதிலிருந்து அவரது இணைப்புச் செயலாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

இவர் 2001 தொடக்கம் 2004ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினராகவும் பிரதிச் செயலாளர் நாயகமாகவும் பதவி வகித்திருந்தார்.

அதன்பின்னர் அக்கட்சியில் இருந்து விலகி அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் எனும் கட்சியை ஸ்தாபித்து, ரிஷாட் பதியுதீன் தலைமையில் அக்கட்சியின் செயலாளர் நாயகமாக செயற்பட்டு வந்தார்.

வர்த்தக, வாணிப, கைத்தொழில், அமைச்சின் ஆலோசகராகவும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம், அசோக் லேலண்ட் நிறுவனம் என்பவற்றின் தலைவராகவும் பதவிகளை வகித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளின் சார்பில் பாராளுமன்ற பொதுத் தேர்தல்களிலும் அவர் போட்டியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித்...

புதிய பிரவேசமே அவசியமாகவுள்ளது. ஆகவே, நிச்சயமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன். அதற்கு, அரசியல் கட்சிகளின் ஆதரவு அவசியமில்லை என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

எனக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை அரசாங்கத்துக்கு சார்பாக அமைந்துள்ளது. இதனை நான் தனிப்பட்ட தோல்வியாக கருதவில்லை. முழு நாட்டு மக்களுக்கும் ஏற்பட்ட தோல்வியாகவே கருதுகிறேன். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதே எனது நோக்கமாக இருந்தது. அரசியல்வாதிகளின் தேவைக்கு ஏற்ப நான் செயற்படாததால் இறுதி காலகட்டத்தில் முறையாக மக்களுக்கு சேவை வழங்க முடியவில்லை.

நீதி எதுவாக இருந்தாலும் இறுதியில் இந்த முடிவே கிடைக்குமென்று நான் அறிந்தே வைத்திருந்தேன். இதில் புதுமையடைய எதுவும் இல்லை. என்னை அந்தப் பதவியிலிருந்து நீக்கி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையை கேள்விக்கு உட்படுத்தி அவர்களின் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தவே முயற்சிக்கிறார்கள். அமைச்சர் காஞ்சன விஜேயசேகரவுக்குத் தேவையான விடயங்கள் இனிமேல் நிறைவேற்றப்படும். மின் கட்டணம் குறையும் என மக்கள் எதிர்காலத்தில் எதிர்பார்க்கக்கூடாது.

இறுதியாக மக்களுக்கு நான் செய்யவிருந்த எனது கடமையை முறையாக நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போய்விட்டது.

மக்களுக்காக குரல்கொடுத்தமைக்கான ஆதரவு எதிர்காலத்தில் அதிகரிக்கும். தற்போது என்னால் அரசியல் செய்ய முடியும். ஆகவே, மக்களுக்காக மக்கள் செல்வாக்குடன் அவர்களுக்காக சேவையாற்றுவதற்கான சுதந்திரம் எனக்கு கிடைத்துள்ளது. அந்த சுதந்திரத்தினூடாக மக்களின் உரிமைகளை பாதுகாத்து, அவர்களின் ஆதரவுடன் இந்த நாட்டிலுள்ள அரசியல் கண்ணோட்டத்தை மாற்றி நாட்டுக்கு சிறந்த நிர்வாக முறையை கொண்டுவந்து மக்களின் ஆலோசனைகளுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சகல இன மக்கள், சர்வமதத் தலைவர்கள், தொழில் நிபுணர்களின் ஆதரவும் கிடைத்துள்ளது.

மக்களுக்காக குரல்கொடுத்த சுயாதீன நிறுவனமொன்றின் தலைவரை நீக்க மக்களால் நியமிக்கப்பட்ட அரசியல்வாதிகள், அவர்களின் அறியாமையினால் தீர்மானம் எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த வாக்கெடுப்பு உறுதிப்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் சிறந்த நிர்வாகத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தையிட்டிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். ஆகவே, இந்த 70 வருடகால சாபத்தை மாற்றியமைக்க சகல இன மக்கள், சமயத் தலைவர்கள், வர்த்தகர்கள் என அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதற்காக சகல அர்ப்பணிப்புகளையும் செய்யத் தயாராகவே இருக்கிறேன்.

நான் தலைவர் பதவியிலிருந்து நீங்கிவிட்டேன் என்பதற்காக ஆணைக்குழுவோ ஆணைக்குழுவின் உறுப்பினர்களோ நீங்க மாட்டார்கள். அறியாமையின் காரணமாகவே இதுபோன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள். தற்போது கிடைக்கும் நியமனங்கள் சகலதும் அரசியல் ரீதியானவையாகவே இருக்கும்.

70 வருடங்களாக கட்டியெழுப்பப்பட்டுள்ள இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமானால் அதற்கு ஏற்ற நபர்கள் நியமிக்கப்பட வேண்டும். எனக்கு அரசியல் கட்சி அவசியமில்லை. புதிய பிரவேசமே அவசியமாகவுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சியென்றவொன்று அவசியமில்லை. 80க்கும் அதிகமான அரசியல் கட்சிகள் தேவைக்கு ஏற்ப இருக்கின்றன. ஆனால், அதற்கேற்ற தலைவர் அந்தக் கட்சிகளில் இல்லை. அவ்வாறான தலைவர்கள் முன்வருவார்களாக இருந்தால் ஆதரவளிப்பேன்.

நிச்சயமாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன். அமைச்சராக இருந்து இந்த நாட்டில் ஒரு வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்க முடியாது. அமைச்சராக இருந்தால் ஒரு அதிகாரியை நீக்குவதற்கு சகலரையும் எதிர்பார்த்திருக்க வேண்டும். தனி நபர்களுக்கிடையிலான பிரச்சினையே இங்கிருக்கிறது. சரியான நபரொருவர் முன்வருவாராக இருந்தால், அவரிடம் தலைமைத்துவம் இருக்குமாக இருந்தால், முகாமைத்துவம் தெரிந்தால், கடனின்றி வருமானத்தை ஈட்டும் முறை தெரிந்தால் மக்களின் ஆலோசனையுடன் இந்தப் பிரச்சினைகளுக்கு இலகுவாக தீர்வை எட்ட முடியும் என்றார்.

## வருட இறுதியில்...

30 சதவீதமாக வீழ்ச்சியை சந்தித்துள்ளது. ஆகவே, இந்த வருடத்தின் நான்காவது காலாண்டு அல்லது அதற்கு முன்னர் பணவீக்கம் ஒற்றை இலக்கத்துக்கு வரும் என்று உறுதியளிப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நேற்று (25) தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் மற்றும் இலங்கை வர்த்தக சபை என்பன இணைந்து ஏற்பாடு செய்த இலங்கையின் முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுக்கான தேசிய கலந்துரையாடல் மத்திய வங்கி ஆளுநரின் தலைமையில் நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பணவீக்க அதிகரிப்பு மற்றும் மீள்செலுத்துகை நிலுவையை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் தீர்மானமிக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதே மத்திய வங்கியின் நோக்கமாகும். பணவீக்க அதிகரிப்பு மற்றும் அந்நிய செலாவணி தட்டுப்பாடு என்பன நாம் சந்தித்துள்ள பிரதான இரு பிரச்சினைகளாகும்.

பணவீக்கம் கட்டுப்பாடின்றி அதிகரிப்பதை தடுப்பதற்காக பல்வேறு தீர்மானமிக்க நடவடிக்கைகளை எடுக்க நேர்ந்தது. நூற்றுக்கு 70 சதவீதம் வரையில் அதிகபட்சம் உயர்வடைந்த பணவீக்கம் தற்போது 30 சதவீதம் வரையில் வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

இந்த வருடத்தின் நான்காவது காலாண்டு அல்லது அதற்கு முன்னர் பணவீக்கம் ஒற்றை இலக்கத்துக்கு வரும் என்று உறுதியாக குறிப்பிடுகிறேன். நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ளும்போது, முறையாக கொள்கை அடிப்படையிலான செயற்பாடுகள் கவலைக்குரியவையாகும்.

குறிப்பாக, வட்டி வீத அதிகரிப்பு, வர்த்தக நடவடிக்கைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அதற்கு தற்போது தற்காலிகத் தீர்வை வழங்கியுள்ளோம். இருந்தபோதும் அவ்வாறான நடவடிக்கைகள், பணவீக்கம் விரைவாக அதிகரித்தல் மற்றும் பொருளாதார நிலையின்மையின் பாரதூரமான விளைவுகளை தவிர்ப்பதற்கு அவசியமாக இருக்கின்றன.

வர்த்தகத்துறை உள்ளிட்ட பொருளாதாரத்தில் பங்குகொள்ளும் சகல தரப்பினருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் அது அவசியமாக இருக்கிறது.

## "நான் அவன்...

(நா. தினுஷா)

"விமான நிலையத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட தங்க கட்டிகள், ஆபரணங்கள் மற்றும் கைபேசிகள் என்பன எனக்கு உரித்தானவை இல்லை. அவை என்னுடன் வந்த சகாவுக்கு சொந்தமான பொருட்களாகும். நான் சட்டவிரோத செயலில் ஈடுபடவில்லை. என்னுடன் வந்த சகா, எனது பெயரைப் பயன்படுத்தி இந்தப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வந்ததாலேயே அங்கு நானும் குற்றமிழைத்தவனாகி விட்டேன்" - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்தார்.

தன்னுடன் வந்த சகாவை நம்பியதே நான் செய்த தவறாகும் என்றும் இந்த விடயத்தில் அரசாங்கம் ஆதரவளிக்காமையின் காரணமாகவே பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று (25) ஊடகமொன்றுக்கு கருத்துத்தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்.எம்.மிராஜ் என்பவரும் நானுமே விமான நிலையத்துக்கு வந்தோம். விமானத்திலிருந்து தரையிறங்கியபோது நான் அதிதிகள் வருகை பிரிவில் வெளியேறினேன். அவர், சாதாரண வெளியேற்ற பிரிவினூடாக விமான நிலையத்திலிருந்து வெளியேறினார். அவரை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவரிடமிருந்த தொலைபேசிகள், தங்க ஆபரணங்கள் என்பன சுங்கப் பிரிவினரால் கைபற்றப்பட்டுள்ளன. அதன் பின்னர், கைப்பற்றப்பட்ட தொலைபேசிகளில் ஒரு தொகை குறைவாக இருக்கிறது. ஏனைய தொலைபேசிகள் என்னிடம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னர் அவரைக் கைதுசெய்த அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர் பெயரிலேயே போர்டிங் பாஸ் இருக்கிறது. அவ்வாறிருக்கையில் எவ்வாறு அதனை எடுத்து வந்தீர்கள் என்று கேட்டுள்ளனர். அதற்கு அவர், நாங்கள் இருவரும் ஒன்றாகவே வந்தோம். கடவுச்சீட்டுகளையும் ஒன்றாகவே சமர்ப்பித்தோம். அவரது போர்டிங் பாஸ் இலக்கமே பொறிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் சுங்க அதிகாரிகள் எனக்கு அழைப்பு விடுத்தார்கள். விசாரணை செய்தார்கள். நடந்த விடயத்தை கூறினேன். அந்தப் பொருட்கள் என்னுடையவை இல்லை. என்னுடன் மிராஜ் என்றொருவர் வந்தார். அவரே இந்த பொருட்களை கொண்டுவந்தார். அவரை நம்பியதே நான் செய்த தவறாகும்.

எனது தவறையும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். என்னுடன் வந்த நபர் தவறு செய்திருந்தாலும், எனது பெயரில் போர்டிங் எடுத்திருந்தால் அதில் என்மீதும் தவறு இருக்கிறது. அதனால், எனது தவறையும் நான் ஒப்புக்கொண்டேன். நான் தவறு செய்யாவிட்டாலும் என்னுடன் வந்த சகாவே தவறிழைத்திருக்கிறார்.

இது குறித்து ஜனாதிபதி செயலாளருக்கும் பிரதமருக்கும் சபாநாயகருக்கும் பேசியிருந்தேன். இந்த விடயங்களை தெளிவுபடுத்தியிருந்தேன். அவர் வாக்குமூலம் வழங்கும்போது எனது பெயரை பயன்படுத்தியுள்ளார். ஆனால் அவரே தவறு செய்துள்ளார். அவரிடமே இந்த பொருட்களுக்கான சகல கணக்குச்சீட்டுகளும் இருக்கின்றன என விளக்கினேன். அவர்கள் உதவி செய்வதாகக் கூறினாலும், எந்த உதவியையும் செய்திருக்கவில்லை. அதன் காரணமாகவே ஜனக ரத்நாயக்கவுக்கு எதிரான பிரேரணையின்போது அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்தேன் என்றார்.

**பெயர் மாற்றம்**

**கட்டுகஸ்தோட்டை, மாத்தளை வீதியில் இல 10/4 என்ற முகவரியைக் கொண்ட தயாகரன் உமாஷினி என்ற பெயரையும் என்னுடைய தேசிய அடையாளயட்டையான 938492980V என்ற இலக்கத்தையுடைய நான் 29-06-2019 ஆம் திகதி முதல் புனித இஸ்லாத்தை ஏற்றதால் எனது பெயரை பாத்திமா ஹனா என மாற்றியுள்ளேன். இனி வரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சார்பில் பொதுசன மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.**

பாத்திமா ஹனா

# இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை அனுமதியோம்

## அமைச்சர் டக்ளஸ்





இலங்கைக் கடற்பரப்புக்குள் வளங்களை அழிக்கும் எவ்விதமான நடவடிக்கைகளையும் அனுமதிக்கப்போவதில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள தமிழ்நாடு அரச சார்பற்ற நிறுவனத்தின் மீன்பிடி முகாமைத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் விவேகானந்தன் நேற்று (25) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக் கடற்பரப்புகளில் இந்திய மீனவர்களின் சட்டவிரோத தொழில் முறையை சுமூகமான முறையில் தடுத்துநிறுத்தும் வகையில் பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகளை நடத்திய போதெல்லாம் தமிழ்நாட்டு மீனவர்கள் கால அவகாசம் கேட்டே காலத்தைக் கடத்தியிருக்கின்றார்கள்.

இவ்வாறு சுமார் 15 வருடங்கள் கடத்தப்பட்டிருக்கின்றன. ஆனாலும், தொடர்ந்தும் அத்துமீறல்களும் வள அழிப்பும் தொடர்வதால் எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த விவேகானந்தன் ,

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புகளில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது தவறுதான் என்பதை துணிந்து சொல்லும் தைரியம் தமிழ் நாட்டில் எவருக்கும் கிடையாது. இவ்விவகாரத்தில் நியாயமான தீர்வொன்றைக் காண்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கைக்கும் கச்சதீவு விவகாரத்துக்கும் தொடர்பில்லை. சில தரப்புகள் அரசியலுக்காக இவ்விரு விடயங்களையும் தொடர்புபடுத்தி பேசுகின்றன.

எனவே, அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக இருதரப்பினருடனும் கலந்துரையாடி நியாயமான தீர்வுக்கு வர முயற்சிக்க வேண்டும்.

இருதரப்பினரும் மீண்டும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே தமது முன்னெடுப்புகளின் நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

# வரி மேன்முறையீட்டுக்கு விசேட நீதிமன்ற முறைமை

அரசாங்கத்துக்கு அறவிடப்பட வேண்டிய சுமார் 950 பில்லியன் ரூபா தொகையில் மேன்முறையீடு மற்றும் எதிர்ப்பு இல்லாத சுமார் 270 பில்லியன் ரூபா தொகையை அறவிடுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுக்காமை குறித்து தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே தலைமையில் 23 ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் குழுக் கூட்டத்தில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தடுத்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு ஆகியன இணைந்து தேசிய பொருளாதாரத்துக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கும் பங்களிப்பு தொடர்பில் கலந்துரையாடியது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பல்வேறு புதிய வரி விதிப்புகளை அறிமுகப்படுத்தி அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அரசுக்கு வருமானம் பெற்றுக்கொடுக்கும் பாரிய நிறுவனமான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு இந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது தொடர்பில் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே கேள்வியெழுப்பினார்.

அதற்கமைய, மேன்முறையீடு செய்வதற்காகக் காணப்படும் ஏற்பாடு காரணமாக வரி செலுத்துபவர்கள் அதனைத் தவறாகப் பயன்படுத்தி வரி செலுத்துவதிலிருந்து தப்பித்துக் கொள்வதாகவும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் மேன்முறையீட்டு சட்ட நடவடிக்கைகள் நிறைவு பெறுவதற்கு சுமார் 2 - 7 வருடங்கள் வரை நீடிப்பதாகவும் இதற்கான சட்ட மறுசீரமைப்புகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குழு சுட்டிக்காட்டியது.

சட்ட ரீதியாகக் காணப்படும் மேன்முறையீட்டு ஏற்பாடு காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு நீண்ட காலம் எடுப்பதாகவும் இது திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்றப்பட்டது எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் ஏனைய நாடுகளில் காணப்படுவது போன்ற வரி தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கான பிரத்தியேகமான நீதிமன்ற அமைப்பு இருந்தால் இந்தச் சட்ட நடவடிக்கைகளைத் துரிதமாக நிறைவு செய்ய முடியுமெனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ரஞ்சித் ஹபுஆரச்சி சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய, இது தொடர்பில் நீதி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்து வரி மேன்முறையீட்டு சட்ட நடவடிக்கைகளுக்குப் பிரத்தியேக நீதிமன்ற அமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சுமார் 5,00,000 வரி கோப்புகளில் வரி செலுத்தக்கூடிய கோப்புகளின் எண்ணிக்கை தொடர்பில் இதன்போது குழு வினவியது. எனினும், அது தொடர்பான தகவல்கள் இல்லாமை காரணமாக குழு அதிருப்தியை வெளியிட்டதுடன், குழுவின் அடுத்த கூட்டத்தில் அவற்றை வழங்குமாறும் குழு அறிவுறுத்தல் வழங்கியது.

மேலும், வரி செலுத்தாத பேரளவில் இயங்கும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. எனினும், இவை தொடர்பான சரியான தகவல்கள் திணைக்களத்திடம் இல்லை என்பது இதன்போது புலப்பட்டது. இதேவேளை, இந்நாட்டில் நடைபெறும் பாரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகள் பெற்றுக்கொள்வதற்கான சரியான முறைமை யின்மை குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது. எனவே, இவற்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பொறிமுறையைத் தயாரிக்குமாறும் அதற்கான சட்ட மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஆதரவை குழுவினூடாக மேற்கொள்வதாகவும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து வரி அறவிடுதல், புதிய வரி கோப்புகளை ஆரம்பித்தல், திணைக்களத்தில் காணப்படும் ஊழியர் வெற்றிடம், பிரதேச செயலகங்களில் உள்ள வரி அதிகாரிகளின் விடயங்கள், RAMIS முறைமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

# வவுனியாவில் எட்டு கால்களுடன் பிறந்த அதிசய கன்றுக்குட்டி



(வவுனியா நிருபர்)

வவுனியா பாலமோட்டை கோவில் குஞ்சுக்குளம் கிராமத்தில் மாடு ஒன்று எட்டுக்கால்களைக் கொண்ட கன்று ஒன்றை ஈன்றுள்ளது.

குறித்த கிராமத்தில் ஆறுமுகம் ஞனேஸ்வரன் என்பவர் வருமானம் ஈட்டுமுகமாக மாடுகளை வளர்த்து வருகின்றார்.

குறித்தநபர் வளர்த்து வரும் மாடு ஒன்று அதிசயிக்கத்தக்க வகையில் எட்டுக் கால்களைக் கொண்ட கன்று ஒன்றைப் பிரசவித்துள்ளது.

குறித்த கன்று தற்போது ஆரோக்கியமாக இருப் பதாகவும் அதற்கு எவ்வித பாதிப்பும் இல்லையெனவும் கன்றைப் பார்வையிட்டு மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட கால்நடை வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கிராமமக்கள் சென்று இவ் அதிசய கன்றுக்குட்டியை ஆர்வத்துடன் பார்வையிட்டு வருவகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரயிலில் மோதி இரண்டு இளைஞர்கள் உயிரிழப்பு

ரயிலில் மோதி இரண்டு இளைஞர்கள் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக வெயாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

வதுருவ ரயில் நிலையத்துக்கருகில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெயாங்கொடை வதுருவ பிரதேசத்தில் வசிக்கும் கவிஷ்க லக்மால் (18 வயது), எஸ்.ஏ.திவங்க ( 19 வயது) ஆகிய இருவருமே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இரு இளைஞர்களின் வீடுகளும் ரயில் பாதைக்கருகாமையில் அமைந்துள்ள நிலையில், காலை சுற்றுலா செல்லத் திட்டமிட்டு வதுருவ ரயில் நிலையத்தை நோக்கி ரயில் பாதை வழியாக இருவரும் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு சென்ற வேளை பதுளையில் இருந்து கொழும்பு கோட்டையை நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# எல்பிட்டிய யுவதியை கொலைசெய்த குற்றவாளிக்கு தண்டனை வழங்குக!

## கம்பளையில் கவனயீர்ப்புப் போராட்டம்

(கலஹா செய்தியாளர்)

கம்பளை, எல்பிட்டிய யுவதி பாத்திமா முனவ்வராவின் கொலையுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபருக்கு கடுமையான தண்டனை வழங்கவேண்டுமென வலியுறுத்தி அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.








பெண்களுக்கு எதிரான சர்வதேச வன்முறைகள் ஒழிப்பு தினமான நேற்று (25) கம்பளை நீதி மன்றத்துக்கு முன்னால் இப்போராட்டம் இடம்பெற்றது.

எல்பிட்டிய யுவதி பாத்திமா முனவ்வராவின் கொலையுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேகநபர் கடந்த 12 ஆம் திகதி கைது செய்யப்பட்டு கம்பளை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இதனையடுத்து நேற்று (25) சந்தேக நபர் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட நிலையிலேயே மேற்படி கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், சந்தேக நபரை எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதவான் ரஞ்சித் பிரேமரட்ண உத்தரவிட்டார்.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட முனவ்வராவின் உறவினர்கள் மற்றும் பிரதேச மக்கள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கக்கோரிய வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர்.

கம்பளை, எல்பிட்டிய கிராமத்தைச் சேர்ந்த முனவ்வரா (22 வயது) தொழில் நிமித்தம் கடந்த 7ஆம் திகதி காலை கெலி ஓயாவுக்குச் சென்ற வேளையிலேயே காணாமல் போயிருந்தார். சம்பவ தினம் தனிமையில் சென்ற முனவ்வராவை வல்லுறவுக்கு உட்படுத்தும் நோக்கில் வழிமறித்ததாகவும் அதற்கு குறித்த யுவதி எதிர்ப்புத் தெரிவித்ததோடு தனது தந்தையிடம் கூறப்போவதாகவும் சத்தமிட்டுள்ளார். அதனால் அவரின் கழுத்தை நெரித்து கொலை செய்து தென்னம் தோப்பில் புதைத்தேன் என மேற்குறித்த கிராமத்தைச் சேர்ந்த அஹமட் (24 வயது) என்ற ஒரு பிள்ளையின் தந்தை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்து வாக்குமூலம் வழங்கியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் காணாமல் போய் ஆறு நாட்களின் பின்னர் கடந்த 13 ஆம் திகதி முனவ்வராவின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு கண்டி வைத்திய சாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் பின்னர் 14 ஆம் திகதி எல்பிட்டிய ஜும்ஆப் பள்ளி மையவாடியில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

கண்டி வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரி சிவசுப்பிரமணியத்தினால் மேற்கொள்ளப்பட்ட மரண பரிசோதனையில் கழுத்து நெரிக்கப்பட்டமையே மரணத்துக்கான காரணமெனவும் எனினும், யுவதி வல்லுறவுக்குட்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை

மேஷம்: வெளியிடப்பயணங்களால் அதிக லாபங்களை அடைவீர்கள், கேட்ட கடன் கிடைக்கப்போகிறது.

ரிஷபம்: போட்டிப் பந்தயங்களில் வெற்றி உண்டு, பயணங்களில் தடை ஏற்பட்டு பின்னர் நிறைவேறும்.

மிதுனம்: குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும். தாய்வழி உதவிகள் அமையும்.

கடகம்: எடுத்த காரியம் தாமதமானாலும் காரியத்தைச் சாதிப்பீர்கள், வீண் மனக் குழப்பங்களைத் தவித்திடுங்கள்.

சிம்மம்: மனோ தைரியத்தைக் கொண்டு அனைத்தையும் சாதிப்பீர்கள், மனது மகிழ்ச்சியாக இருக்கும்.

கன்னி: பணம் இருக்கிறதே என்ற எண்ணத்தில் செலவு செய்து பின் நஷ்டப்படுவீர்கள், தூரப் பயணங்கள் வேண்டாம்.

துலாம்: மூத்த உறுப்பினர்கள் உங்களுக்காக உதவ முன்வருவர். பெணகள் மூலமான தன வரவுகள் உண்டு.

விருச்சிகம்: தொழில் வகையில் புகழ், கௌரவம் மேலோங்கும், நினைத்ததை வெற்றியுடன் சாதிப்பீர்கள்.

தனுசு: திடீர் பிரயாணங்களால் உடல் அசதி ஏற்படும், உங்களுக்கு வேண்டியவர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

மகரம்: திட்டமிட்ட காரியங்கள் சற்றுத் தாமதமாகி நடைபெறும், வீணே மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

கும்பம்: ஆன்மீக பயணங்களால் செலவுகள் ஏற்படும், தந்தை வழி நல்லது. சொத்துகளால் லாபம் உண்டு

மீனம்: பெண்களால் பாராட்டப்படுவீர்கள், கூட்டு வியாபாரத்தில் நீங்கள் எண்ணிய லாபத்தை அடைவீர்கள்.

| | |
|---|---|
| திதி | : சப்தமி முழுவதும் (வளர்) |
| நட்சத்திரம் | : ஆயிலியம் பி.ப.8.50 வரை பின் மகம் |
| யோகம் | : மரணயோகம் முழுவதும் |
| வார சூலை | : மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| நல்லநேரம் | : மு.ப. 5.50– 6.50 மணி வரை |
| ராகுகாலம் | : 10.20– 11.50 மணி வரை |
| எமகண்டம் | : 2.50- 4.20 மணி வரை |
| குளிகை | : 7.20 – 8.50 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : தனுசு – மகரம் ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |
| தனஅதிஷ்டம் | : பூசம், அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு) |
| விஷேட தினம் | : ------- |

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739









கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கத்தினால் வத்தளை ஹுணுப்பிட்டிய ஸாஹிரா முஸ்லிம் வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு இலவச வகுப்புகளை நடத்தியதற்கு மேற்படி சங்கத்தைப் பாராட்டும் வைபவமும் மாணவர்களுக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வும் அண்மையில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.


வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 26ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# கனேடிய பிரதமரின் கூற்றும் இனவாதிகளின் காட்டுக்கத்தலும்!

கனேடிய பாராளுமன்றத்தில் அதன் எம்.பிக்களால் நிறைவேற்றப்பட்ட தமிழர் இனப்படுகொலை தினம் கடைப்பிடிப்பு (மே 18) முன் மொழிவு தொடர்பான அறிவிப்பை கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட விவகாரத்தில் தனது கடுமையான எதிர்ப்பை இலங்கை தெரிவித்ததையடுத்து, இப்போது கனடாவுக்கு எதிராக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

கனேடிய பிரதமர் தமிழர் இனப்படுகொலை தினமாக மே 18ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் என்ற அறிவிப்பை கடந்த மே 23ஆம் தேதி வெளியிட்ட பிறகு, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இலங்கைக்கான கனேடிய தூதுவரை நேரில் அழைத்து, கனேடிய அரசின் அறிவிப்பை முழுமையாக நிராகரிப்பதாக கூறினார்.

இதனையடுத்து சிங்கள இனவாதிகளாக கருதப்படும் விமல் வீரவங்ச, சரத் வீரசேகர, உதய கம்மன்பில உட்பட்டோர் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இலங்கையில் நடக்காத தமிழ் இனப்படுகொலைக்காக ஒரு திகதியை ஒதுக்குவதற்கு பதிலாக, கனடாவில் ஆதிவாசி தினம் கடைப்பிடிக்கப்படும் ஜூன் 21ஆம் தேதியை, கனேடிய ஆதிவாசி இனப்படுகொலை தினமாகப் பெயரிட வேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோ இது பற்றி தமது நாட்டு பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில், 14 வருடங்களுக்கு முன்பு நிறைவு பெற்ற இலங்கையின் சிவில் யுத்தத்தின் கடைசி நாட்களில் முள்ளிவாய்க்காலில் நடந்த படுகொலை உள்ளிட்ட சம்பவங்களில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்கள் காவு கொடுக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

*''இலங்கையில் 14 வருடங்களுக்கு முன்னர் முடிவடைந்த ஆயுத போராட்டத்தில் நடந்த உயிரிழப்புகளை நாம் இன்று நினைவு கூர்கிறோம். முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற படுகொலை உட்பட ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது உயிர்களை இழந்ததுடன், பலர் இன்னமும் காணாமல் போயுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் அல்லது இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்டவர்கள், உயிரை பாதுகாத்துக் கொண்டவர்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்களுடன் இணைந்து இந்த நாளை நாம் நினைவு கூர்கிறோம்.*

*பல ஆண்டுகளாக நாடு முழுவதுமுள்ள சமூகங்களில் நான் சந்தித்த பலர் உள்ளிட்ட, மோதல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் - கனேடியர்களின் கதைகள், மனித உரிமைகள், அமைதி மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்பதை நினைவூட்டியது.*

*2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் பிரேரணையொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு நாம், எமது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்ததுடன், நாட்டின் மனித உரிமை, பொருளாதாரம் மற்றும் அரசியல் சர்ச்சைக்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரினோம்.*

*எதிர்வரும் ஆண்டுகளில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை பாதுகாத்துக்கொள்வதற்காக, இலங்கைக்குள் சமய சுதந்திரம், நம்பிக்கை, பன்மைத்துவ சுதந்திரம் ஆகியவற்றை கோருவதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையிலுள்ள ஏனைய தீர்மானங்களை நிறைவேற்றுவதில் கனடா, உலகளாவிய தலைமைத்துவத்தை வழங்குகின்றது. மேலும், 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மனித உரிமை மீறலுக்கு பதிலளிக்கும் வகையில், எமது அரசாங்கம், இலங்கை அரச அதிகாரிகள் நால்வருக்கு எதிராக தடைகளை விதித்தது.*

*தமிழ் - கனேடியர்கள் நம் நாட்டிற்காக செய்த மற்றும் தொடர்ந்தும் செய்து வரும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் அனைத்து கனேடியர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன். இலங்கையில் இடம்பெற்ற ஆயுதப் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் அறிந்துகொள்ளுமாறும், துன்பப்படும் அல்லது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் இணைந்து ஒற்றுமையை வெளிப்படுத்துமாறும் அனைவரையும் ஊக்குவிக்கிறேன்.''*

இவ்வாறு கனேடிய பிரதமர் தெரிவித்திருந்தார்.

கனேடிய பிரதமரின் கருத்துக்கு எதிர்வினையாற்றும் சிங்களத் தேசியவாதிகள் அதனூடாக வழமையான தங்களின் மாமூல் அரசியலை செய்வதை காணமுடிகின்றது. கனடாவுக்கு உத்தரவிடும் வகையில் அல்லது அந்நாட்டை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்ளும் இவர்கள், வரலாற்றில் தங்களால் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளை இலகுவில் மறந்துவிடுகின்றனர். இல்லையேல் மறந்துவிட்டதுபோல நடிக்கின்றனர். இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை என்றால் கனேடிய பிரதமரின் கூற்றுக்கு சவால் விடுத்து, தேவையெனில் சர்வதேச விசாரணையை நடத்துங்கள் என்று கூறாமல், மாறாக உயரிய நாட்டின் மாண்பை இழிச் சொற்களால் விமர்சிக்கும் கைங்கரியத்தை சிங்கள தேசியவாதிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கனடா கடந்த காலங்களில் இலங்கைக்கு பெரிதும் உதவிகளை வழங்கிய ஒரு நாடு. அதேபோல இலங்கையுடன் நெருங்கிய நட்பைக்கொண்ட நாடு. ஆனால், அதற்காக இலங்கையின் கடந்தகால தவறுகளை முழுப்பூசணியை சோற்றுக்குள் மறைத்ததுபோல மறைக்கும் தேவை அந்நாட்டிற்கில்லை.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் என்ற தொனிப்பொருளின் கீழ் கடந்த காலங்களிலும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளுக்கு கனடா ஆதரவளித்திருந்தது இதன் அடிப்படையில்தான்.

சிங்கள தேசியவாதிகள் கனேடிய பிரதமரை கண்டிக்கும் முன்னர் தங்களையும் தங்களது மனச்சாட்சியையும் மீளாய்வு செய்துகொள்ள வேண்டும். இந்த நாட்டில் தமிழர்கள் மீது நடந்தது இனப்படுகொலையா இல்லையா என்பதற்கு அப்போது பதில் கிடைக்கும்.

## இன்றைய நாளில்...

- 1912 – இலங்கையில் இருந்து 7 பேரைக் கொண்ட முதலாவது தொகுதி சிறைக்கைதிகள் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.
- 1958 – இலங்கை இனக்கலவரம் கொழும்புக்குப் பரவியது. தமிழரின் வீடுகள், கடைகள், வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டு பலர் கொல்லப்பட்டனர்.
- 1969 – அப்பல்லோ-10 விண்கலம் மனிதனை நிலவுக்கனுப்பும் தனது அடுத்த திட்டத்திற்குத் தேவையான சோதனைகளை வெற்றிகரமாக முடித்துவிட்டு பூமிக்குத் திரும்பியது.
- 1987 – வடமராட்சியில் இலங்கை ஆயுதப்படையினரின் ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது.
- 2002 – மார்ஸ் ஒடிசி விண்ணூர்தி செவ்வாய்க்கோளில் நீர்ப் பனிப்படிவுகள் இருப்பதை அறிந்தது.



# செயற்கை இனிப்பூட்டிகள் ஆபத்தானவையா?

''செயற்கை இனிப்பூட்டிகளை (Artificial sweeteners) நீண்ட காலம் பயன்படுத்தும்போது இரண்டாம் வகை நீரிழிவு நோய் (Type 2 Diabetes Mellitus) வருவதற்கான வாய்ப்புகள் அதிகரிப்பதோடு, பெரியவர்களுக்கு இதய நோய் - இறப்பு அபாயம் அதிகரிக்கவும் அவை காரணமாகலாம்'' என்று எச்சரித்திருக்கிறது உலக சுகாதார ஸ்தாபனம் (WHO).

மேலும், ''உடல் எடையைக் குறைக்கவும், நீரிழிவு நோய், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற தொற்றாநோய்களைத் தடுக்கவும் சீனி அல்லாத இனிப்பூட்டிகளைப் (Non-sugar sweeteners) பயன்படுத்துபவர்கள், இனி மறுபரிசீலனை செய்வது நல்லது'' என்றும் அந்த ஸ்தாபனம் புதிய வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது. மருத்துவ உலகில் இது முக்கியமான விவாதப்பொருளாக மாறியுள்ளது.

### சீனி அல்லாத இனிப்பூட்டிகள்

நீரிழிவு நோய் பாதிப்பு உள்ளவர்கள் அந்த நோயின் தீவிரத்தைக் குறைக்க, வெள்ளைச் சர்க்கரையைத் தவிர்த்து, அதற்கு மாற்றாகக் குறைந்த கலோரி கொண்ட சர்க்கரை அல்லாத இனிப்பூட்டிகளைக் கோப்பி - தேநீரில் பயன்படுத்துவது அதிகரித்துவருகிறது. சக்கரின், அஸ்பார்டேம், ஸ்டீவியா, சுக்ரலோஸ், அசிசல்ஃபேம் உள்ளிட்ட சர்க்கரை அல்லாத இனிப்பூட்டிகள் பலதரப்பட்ட உணவுப் பொருள்களில் மட்டுமின்றி குளிர்பானங்கள், செயற்கைப் பழச்சாறுகள், மருந்து, மாத்திரைகள் ஆகியவற்றிலும் சேர்க்கப்படுகின்றன.

வெள்ளைச் சீனியை விடப் பல நூறு மடங்கு அதிக இனிப்புச் சுவை உள்ளதாலும், கலோரி ஆற்றல் அதிகமில்லை என்பதாலும் இத்தகைய இனிப்பூட்டிகளின் பயன்பாடு எல்லாத் தரப்பினரிடமும் அதிகரித்திருக்கிறது. 2022இல் மட்டும் உலகச் சந்தையில் செயற்கை இனிப்பூட்டிகளின் விற்பனை மதிப்பு 7.2 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டிவிட்டது என்றால், இதன் விஸ்வரூபத் தாக்கத்தைப் புரிந்துகொள்ளலாம்.

என்ன காரணம்? உலக அளவில் மக்கள் மத்தியில் மருந்துப் பயன்பாட்டையும் உணவுப்பொருள் பயன்பாட்டையும் கட்டுப்படுத்தும் அமெரிக்க உணவு - மருந்து நிர்வாகம் (FDA), செயற்கை இனிப்பூட்டிகளைப் பயன்படுத்துவதில் ஆபத்து இல்லை என்று 2015இல் அறிவித்தது. அதன் நீட்சியாக, பயனாளிகள் அன்றாடம் தங்களுக்குத் தேவைப்படும் கலோரிகளில் 10%க்கும் குறைவான கலோரிகளைச் செயற்கை இனிப்பூட்டிகள் வழியாக எடுத்துக்கொள்ளலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் 2015 மார்ச் 4 அன்று பச்சைக்கொடி காட்டியது.

மேலும், இத்தகைய இனிப்பூட்டிகளைத் தினசரி 5% என்ற அளவில் எடுத்துக்கொள்ளும்போது உடல் எடையைக் குறைக்கவும் அவை உதவுகின்றன என அறிவித்தது. இதையொட்டி உலக நாடுகள் பலவும் செயற்கை இனிப்பூட்டிகளைப் பொதுச்சமூகம் பயன்படுத்துவதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டன.

### மறு ஆய்வும் புதிய வழிகாட்டுதலும்

இந்நிலையில், எட்டு ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்கை இனிப்பூட்டிகளைப் பயன்படுத்துபவர்களுக்குப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது என்று பிரான்ஸில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று அறிவித்தது. அதைத் தொடர்ந்து, ஸ்டீவியா (Stevia) என்னும் பிரபலமான செயற்கை இனிப்பூட்டியில் 'எரித்ரிட்டால்' (Erythritol) என்னும் வேதிப்பொருள் இருப்பதாகவும், இது மாரடைப்பு, பக்கவாதம் போன்ற இரத்தநாள அடைப்பு தொடர்பான சிக்கல்களை அதிகரிப்பதாகவும் மற்றொரு ஆய்வு தெரிவித்தது.

இந்த ஆய்வு முடிவுகள் கொடுத்த அழுத்தத்தில், சீனி அல்லாத இனிப்பூட்டிகள் குறித்தும் அவற்றின் பயன்கள் குறித்தும் உலக சுகாதார ஸ்தாபனம் மறுஆய்வு செய்தது. மொத்தம் 283 ஆய்வுக் கட்டுரைகளின் அடிப்படையில், 'சீனி அல்லாத இனிப்பூட்டிகளின் பயன்கள்: உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டுதல்கள்' (Use of non-sugar sweeteners: WHO guidelines) என்னும் தலைப்பிலான அறிக்கையைக் கடந்த வாரம் வெளியிட்டது.

அதன்படி, 2015இல் அந்த ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையைத் மீளப் பெற்றுக்கொண்டுள்ளது. அதாவது, சீனி அல்லாத இனிப்பூட்டிகள் உடல் எடையைக் குறைக்கப் பயன்படுவதில்லை. மாறாக, அவற்றை நீண்டகாலம் தொடர்ந்து பயன்படுத்தும்போது, இரண்டாம் வகை நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு 23%, இதயநோய்க்கான வாய்ப்பு 32%, பக்கவாதம் வருவதற்கான வாய்ப்பு 19%, உயர் இரத்த அழுத்தம் ஏற்படும் வாய்ப்பு 13% அதிகரிக்கிறது என்று இப்போது எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையில் எந்த அளவு நம்பகத்தன்மை உள்ளது என்று உலக அளவில் உள்ள உணவியலாளர்களும் மருத்துவ நிபுணர்களும் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தப் புதிய வழிகாட்டுதலானது மக்களிடம் தேவையில்லாத அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி உள்ளதாகவே அவர்கள் கருதுகின்றனர்.

### ஆய்வின் பலவீனங்கள்

உலக சுகாதார ஸ்தாபனம் ஆதாரமாகக் காட்டும் ஆய்வுகளின் எண்ணிக்கை 300ஐ நெருங்கினாலும் அவை ஒவ்வொன்றும் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளே அன்றி, பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டவை அல்ல! மேலும், அந்த ஆய்வுகளில் பலவும் சோதனை எலிகளிலும் சுண்டெலிகளிலும்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனிதர்களிடம் மேற்கொள்ளப்பட்டவை குறைவு.

அதிலும், பயனாளிகளிடம் கேள்வி கேட்டுப் பதில் பெற்ற ஆய்வுகள்தான் (Observational studies) அதிகம். இம்மாதிரியான ஆய்வுகளில் பயனாளிகளுக்குச் செயற்கை இனிப்பூட்டியைக் கொடுத்து ஆய்வு செய்வதில்லை. புற்றுநோய்க்கான வாய்ப்புள்ளது என்பதை உறுதிசெய்யவும் போதுமான தரவுகள் இல்லை.

அடுத்ததாக, ஸ்டீவியா இனிப்பூட்டியைப் பயன்படுத்தியவர்களுக்கு அதில் இருக்கும் எரித்ரிட்டல் வேதிப்பொருள்தான் மாரடைப்பை ஏற்படுத்துகிறது என்பதை எந்த ஆய்வும் உறுதி செய்யவில்லை. காரணம், அந்த ஆய்வில் கலந்துகொண்டவர்களில் பலருக்கும் மாரடைப்பு வருவதற்கான உயர் இரத்த அழுத்தம், மிகை கொலஸ்ட்ரோல் போன்ற ஆபத்துக் காரணிகள் (Risk factors) ஏற்கெனவே இருந்துள்ளன.

பொதுவாக, உடல் எடையைக் குறைக்க நவீன மருத்துவம் சீனி அல்லாத இனிப்பூட்டிகளைப் பரிந்துரைப்பதில்லை. மாவுச்சத்து மிகுந்த உணவு வகைகளைக் குறைவாக எடுத்துக்கொள்ளவே பயனாளிகளுக்குப் பரிந்துரைப்பதுண்டு.

### கலோரிக் கூடுகள்

தமிழகத்தின் பிரபல நீரிழிவு நோய் மருத்துவ நிபுணர் வி.மோகன், உலக சுகாதார ஸ்தாபனத்தின் இந்தப் புதிய வழிகாட்டுதல் குறித்துப் பேசும்போது,

"செயற்கை இனிப்பூட்டிகளின் பயன்பாடு குறித்துத் தமிழகத்தில் எங்கள் நிறுவனமும் ஆய்வு நடத்தியது. உடற்பருமன் மற்றும் நீரிழிவு நோய் உள்ளவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட அந்த ஆய்வில், உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்ததுபோல் ஆபத்து இருப்பதாகத் தெரியவில்லை. வெள்ளைச் சீனிக்குப் பதிலாக சிறிதளவில் சீனி அல்லாத இனிப்பூட்டிகளைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்பதே எங்கள் ஆராய்ச்சியின் முடிவு" என்றார்.

அப்படியானால், தவறு எங்கே இருக்கிறது? "சீனி அல்லாத இனிப்பூட்டிகளில் கலோரிகள் குறைவு என்ற காரணத்தால், பயனாளிகள் அத்தகைய இனிப்பூட்டிகள் கலந்துள்ள உணவு வகைகளையும் குளிர்பானங்களையும் பழச்சாறுகளையும் அளவுக்கு அதிகமாகவே பயன்படுத்துகின்றனர்.

அதுதான் ஆபத்தாகிறது. உதாரணமாக, செயற்கை இனிப்பூட்டி கொண்டு தயாரிக்கப்பட்ட ஓர் இனிப்புப் பலகாரத்தை நிறையச் சாப்பிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

அந்தப் பலகாரத்தில் இனிப்பு மட்டுமா இருக்கிறது? கோதுமை இருக்கிறது. எண்ணெய் இருக்கிறது. நெய் இருக்கிறது. இந்த மூன்றும் 'கலோரிக் கூடுகள்' என்பதைப் பயனாளிகள் மறந்துவிடுகின்றனர்.

ஆக, கோதுமையும் நெய்யும்தான் அவர்களுக்கு உடற்பருமனை ஏற்படுத்தி, 'இன்சுலின் எதிர்ப்பு நிலை'யைத் (Insulin resistance) தூண்டி, இரண்டாம் வகை நீரிழிவு நோய் ஏற்பட வழி அமைக்கின்றன. செயற்கை இனிப்பூட்டிகள் காரணமல்ல" என்கிறார் வி.மோகன்.

மேலும், "எதிர்வரும் ஜூன் மாதம் அமெரிக்க நீரிழிவு நோய்க் கழகம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கில், எங்கள் ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்க இருக்கிறோம். அப்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய வழிகாட்டுதல் தொடர்பாகவும் விவாதிப்போம். அந்தக் கருத்தரங்கில் செயற்கை இனிப்பூட்டிகள் குறித்துப் பயனாளிகளுக்கு ஒரு தெளிவான முடிவு கிடைத்துவிடும்" என்கிறார் அவர். அப்படி ஒரு சரியான முடிவு தெரியும் வரை நாமும் காத்திருப்போம்.

*(நன்றி - இந்து தமிழ்)*

## நக்கல் நமசிவாயம்

**பதவி நீக்கப்பட்ட ஜனக ரத்நாயக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகிறாராம்..! அப்படியெண்டா இனி கரண்ட் பில் குறைய கொஞ்சக் காலம் காத்திருக்கோணும் என்னங்கோ..!**





# ஆறுமுகன் தொண்டமான் நினைவுதினம் இன்று

சௌமியமூர்த்தி ஆறுமுகன் இராமநாதன் தொண்டமான் அல்லது ஆறுமுகன் தொண்டமான் (Savumiamoorthy Arumugan Ramanathan Thondaman, மே 29, 1964 - மே 26, 2020) இலங்கையின் மலையகத் தமிழ் அரசியல்வாதியும் தொழிற்சங்கத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சரும் ஆவார்.

இவர் முன்னாள் அமைச்சரும் தொழிற்சங்கவாதியுமான சௌமியமூர்த்தி தொண்டமானின் பேரன் ஆவார். இவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும், நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகவும் இறக்கும் வரை பதவியில் இருந்தார். இவர் 2020 மே 26 அன்றிரவு தனது இல்லத்தில் மாரடைப்பால் காலமானார். இவர் 2020 பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடவிருந்தார்.

ஆறுமுகன் தொண்டமான் 1990ஆம் ஆண்டு இ.தொ.காவில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1993ஆம் ஆண்டு இ.தொ.காவில் நிதிச் செயலாளராகவும் 1994ஆம் ஆண்டு பொதுச்செயலாளராகவும் பதவியேற்றார். முதல் தடவையாக 1994 பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு 74 ஆயிரம் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றார். அதன் பின்னர் 2000, 2004 தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றார்.

அரசியல், தொழிற்சங்கப் பயணத்தை பல்வேறு வெற்றிகளுடன் தொடர்ந்து கொண்டிருந்த நேரத்தில் அன்னார் திடீர் சுகவீனத்துக்குள்ளாகி காலமானார்.

# தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு அரச நிறுவனங்களில் விசேட வேலைத்திட்டம்



அரசாங்க நிறுவனங்களில் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் திகதிகளுடன் கூடிய வேலைத்திட்ட மொன்றை மே 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு அறிவுறுத்தி பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது.

இதற்கமைய அக்குழுவினால் தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை முன்வைப்பதற்காக கோபா குழு அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் அண்மையில் (23) பாராளுமன்றத்தில் கூடியது.

இதற்கமைய பதின்மூன்று அரசாங்க நிறுவனங்களுக்குத் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க விளக்கமளித்தார். இதற்கிணங்க கீழ்வரும் நிறுவனங்கள் 13ற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

ஆட்பதிவுத் திணைக்களம், இலங்கை சுங்கம், ஏற்றுமதி - இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் , கமநலத் திணைக்களம், இலங்கை தர நிர்ணய நிறுவனம், மோட்டார் வாகனத் திணைக்களம் , மதுவரித் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம, கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், உணவுப் பாதுகாப்புப் பிரிவு, சுகாதார அமைச்சு, கொழும்பு மாநகரசபை, நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு என்பனவே அவையாகும்.

இங்கு, தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள், பயன்படுத்தப்படும் மென்பொருளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் குறித்து கோபா குழு நீண்ட நேரம் விவாதித்தது.

ஆட்பதிவுத் திணைக்களத்தில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் அங்கு பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் மென்பொருள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) இப்பணிக்கு தமது நிறுவனத்தினால் வழங்கக் கூடிய பங்களிப்புத் தொடர்பில் விளக்கமளித்தது. இக்கூட்டத்தில் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக அதிகாரிகள் உட்பட இராஜாங்க அமைச்சர்களான டயானா கமகே, சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான நிரோஷன் பெரேரா, ஜே. சி. அலவத்துவல, (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட, வீரசுமண வீரசிங்க, மஞ்சுளா திஸாநாயக்க மற்றும் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு சீனாவின் மண்ணெண்ணெய் விரைவில் கிடைக்கும்

## அமைச்சர் டக்ளஸ் தகவல்

சீன அரசாங்கத் தினால் கடற்றொழி லாளர்களுக்கு வழங்கப்படுகின்ற மண்ணெண்ணெய் விரைவில் வடக்கு, கிழக்கு மீன வர்களுக்கும் வழங்கப்படும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை முழுவதுமான கடற்றொழில் அமைச்சர் என்ற வகையில் மீனவ மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிவேன். மீனவ மக்களின் வாழ்வாதாரம், அன்றாட தொழில் நடவடிக்கை, வீட்டு வசதிகள் என்பவற்றை மேம்படுத்தும் முகமாக சீன அரசாங்கம் சுமார் 1,500 மில்லியன் ரூபாக்களுக்கான செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளது.

அதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக இலங்கையில் உள்ள 15 கடற்றொழில் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 27 ஆயிரம் படகு உரிமையாளர்களுக்கு தலா 150 லீட்டர் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 75 லீட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதோடு இரண்டாம் கட்டமாக எஞ்சியவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வட மாகாணத்தில் உள்ள நான்கு கடற்றொழில் மாவட்டங்களுக்கும் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று கடற்றொழில் மாவட்டங்களுக்கும் விரைவில் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

சீன அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் கடற்றொழிலாளர்களுக்கான வீடு மற்றும் கடற்றொழிலாளர்களுக்கான வலைகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வுள்ளன. அது மட்டுமல்லாது, எரிபொருள் விலையேற்றத்தைக் கருத்திற்கொண்டு பட்டரியில் இயங்கக் கூடிய படகை சம்பிரதாயபூர்வமாக கடலில் இறக்கியுள்ளோம்.

எரிபொருளிலும் பார்க்க பட்டரியில் இயங்கும் படகு இலாபகரமானதாகவும் சூழலுக்கு மாசில்லாத தொழில்நுட்பமாகவும் கருதும் நிலையில், அதனை இலங்கையில் விரிவுபடுத்துவதற்கான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜப்பான் அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்திய அரசாங்கம் என்பன கடற்றொழிலாளர்களுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ள நிலையில், விரைவில் அதற்குரிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக வசதிபடைத்தவர்கள் உதவ வேண்டும்

## அப்ரார் கல்வி அமைப்பின் செயலாளர்

(பேருவளை செய்தியாளர்)

பேருவளை அப்ரார் கல்வி அமைப்பினால் மேற்கொள்ளப்படும் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் தனவந்தர்கள் மற்றும் பரோபகாரிகளுக்கு விளக்கமளிக்கும் விஷேட கூட்டம் பேருவளை மருதானை மனாரா பீச் ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவரும் முன்னாள் முஸ்லிம் விவாகப் பதிவாளருமான எம்.ஜே.எம். நிஸாம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டதில் பாராளுமன்ற உறுப்பினரும் அப்ரார் கல்வி அமைப்பின் ஸ்தாபகருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், செயலாளரும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பொருளாளருமான கலாநிதி ஏ. அஸ்வர் அஸாஹிம் , பொருளாளர் ஹலீம் ஏ. அஸீஸ் உட்பட அமைப்பின் முக்கியஸ்தர்கள் மற்றும் களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

2012 ஆம் ஆண்டு அப்ரார் கல்வி அமைப்பு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதோடு பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு அவர்களது கல்வியை இடையூறின்றி தொடர புலமைப்பரிசில்களையும் வழங்கி வருகிறது.

இந்த புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டத்தை பேருவளைப் பகுதியில் உள்ள ஏனைய பாடசாலை மாணவர்கள் பயன்பெறும் வகையில் விஸ்தரிக்கும் நோக்குடன் பிரதேச தனவந்தர்கள் மற்றும் பரோபகாரிகளின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் ஓர் அங்கமாக இந்த அமைப்பின் கடந்த கால புலமைப்பரிசில் வேலைத்திட்டங்கள் தொடர்பில் பரோபகாரிகள் மற்றும் தனவந்தர்களுக்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. செயலாளர் கலாநிதி ஏ. அஸ்வர் அஸாஹிம் இங்கு உரையாற்றுகையில், கல்வியினூடாக சமூக மேம்பாடு என்பதே அப்ரார் கல்வி அமைப்பின் பிரதான நோக்கமாகும்.

கல்வி என்பது சமூகத்தின் முதுகெலும்பாகும். முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால விமோசனம் கல்வியிலேயே தங்கியுள்ளது. சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக வசதி படைத்த தனவந்தர்கள் தாராளமாக உதவி செய்ய வேண்டும். இந்தக் கல்வி நிலையத்தின் எதிர்கால வேலைத்திட்டத்துக்கு பிரதேச தனவந்தர்கள், பரோபகாரிகள் முடியுமான பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும். கடந்த காலத்தில் செய்த உதவிகள் மூலம் வறிய மாணவர்கள் பெரும் பயனைப் பெற்றார்கள். பிரதேசத்தில் உள்ள 4 பாடசாலைகளை மையமாக வைத்து எமது கல்வி நடவடிக்கை அமைந்துள்ளது. புலமைப்பரிசில் வழங்கல், கருத்தரங்கு, செயலமர்வு மற்றும் கல்வி விழிப்புணர்வு ஆகிய வேலைத்திட்டங்களை அப்ரார் கல்வி அமைப்பு மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார். இக்கூட்டத்தில் அளுத்கம வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலய அதிபர் பீ.எம்.எம் ஜாபிர், எம். இஹ்ஸான் ஆசிரியர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

# செயலாளர் நாயகத்தின் மறைவு கவலை தருகிறது

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் அனுதாபம்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி வை. எல்.எஸ். ஹமீதின் மறைவு மிகவும் கவலையளிப்பதாகவும் அவரின் மரணச்செய்தி உலகின் நிலையாமையை ஒரு கணப்பொழுதில் உணர்த்தியுள்ளதாகவும் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி வை.எல்.எஸ்.ஹமீதின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“சட்டத்துறையில் மாத்திரமன்றி, அரசியலிலும் ஆழ்ந்த அறிவு, அனுபவமுடையவர் வை.எல்.எஸ்.ஹமீட். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூலகர்த்தாக்களில் ஒருவரான இவரிடம் இருந்தவை எல்லாம் திறமைகள்தான். தனது நிலைப்பாட்டில் உள்ள நியாயத்தை நிரூபிக்கும் பாங்கே ஒரு சாமர்த்தியமானது.

சிறிதுகாலம் முரண்பட்டிருந்த அவர், காலச்சுழற்சியில் நம்பிக்கை வைத்திருந்தார். சட்டத்தின் பல பரிமாணங்களையும் கற்றுத்தேர்ந்த விவேகி வை.எல்.எஸ்.ஹமீட். ஆனாலும், அடக்கம் - அமைதியே அவரது ஆளுமையானது. முஸ்லிம் அரசியலின் வளைவு, நெளிவுகளை நிமிர்த்திச் செல்லுமளவுக்கு அவரிடம் தீட்சண்யமிருந்தது.

மரணத்தின் வாயிலை எந்தச் சக்தியாலும் அடைக்க முடியாதென்பதே எமது நம்பிக்கை. இந்த நம்பிக்கைதான் எங்களை நிதானப்படுத்துகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது கழாகத்ரைப் பொருந்திக்கொள்ளும் ஈமானை அன்னாரின் இழப்பால் துயரும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தந்தருள்வானாக.

அல்லாஹ் அன்னாரைப் பொருந்திக்கொண்டு, அவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸுல் அஃலா எனும் உயர்மிகு சுவன பாக்கியத்தை வழங்குவானாக என்றும் குறிப்பிட்டுள்ளது.

# வைத்தியர்களுக்கான கிரிக்கெட் போட்டி குருநாகலில் ஆரம்பம்

ஸ்ரீலங்கா டொக்டர்ஸ் கிரிக்கெட், இலங்கை வைத்திய சபை மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள வைத்தியர்களுக்கான கிரிக்கெட் தொடர் இன்றும் (26) நாளையும் (27) நாளை மறுதினமும் (28) குருநாகல், வெலகெதர மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

இப்போட்டித் தொடர் இருபதுக்கு இருபதுக்கு போட்டித் தொடராக நடைபெறவுள்ளதுடன் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, கண்டி மற்றும் தம்புள்ளை ஆகிய பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஐந்து அணிகள் இப்போட்டித்தொடரில் பங்கேற்கவுள்ளன.

கடந்த வார இறுதி நாட்களில் முதல் சுற்றுப்போட்டி குருநாகலில் இடம்பெற்ற நிலையிலேயே இறுதிச் சுற்றுக்கான போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறும். இதேவேளை, இறுதிச் சுற்றுப்போட்டி 28 ஆம் திகதி இடம்பெறுமென ஏற்பாட்டுக் குழு மேலும் தெரிவித்துள்ளது.

இறுதிச்சுற்றுப்போட்டியானது யூடியூப் வலைத்தளத்தினூடாக நேரலையாக ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# இடமாற்றம்கோரி ஆசிரியர்கள் வடமாகாண ஆளுநருக்கு கடிதம்

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் பயிற்சி ஆசிரியரொருவர் மீது பாடசாலை மாணவன் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை (24) தாக்குதல் நடத்தியுள்ளார். கடந்த ஆண்டு நவம்பர் மாதமும் குறித்த பாடசாலையில் மாணவனொருவனால் பிரச்சினை ஏற்பட்டு ஆசிரியரொருவர் மீது குறித்த மாணவனின் தந்தை தாக்குதல் மேற்கொண்டிருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே ஒஸ்மானியா கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி வடக்கு ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களாகிய நாம் தினமும் இப்பாடசாலையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றோம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியால் பயிற்சிக்காக வந்த ஆசிரியர் மீது தரம் 11 மாணவர்கள் நேற்றுமுன்தினம் (24) தாக்குதல் நடத்தியுள்ளனர். இது இரண்டாவது சம்பவமாகும். இவ்வாறு தொடர்ந்து ஆசிரியர்கள் மீது தாக்குதல்கள் இடம்பெறுவதனால் இப்பாடசாலையில் கடமையாற்றுவது அச்சுறுத்தலாகவே உள்ளது.

எனவே, எமக்கு வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு இடமாற்றம் பெற்றுத்தராவிடின் உடல் ரீதியாகப் பாதிக்கப்படும் பட்சத்தில் நீங்களே பொறுப்புக்கூறுபவர்களாகக் கருதப்படுவீர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் மனித உரிமை ஆணைக் குழு, இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குருந்தூர்மலை ஆர்ப்பாட்ட விவகாரம் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் கடந்த 2022.06.12 அன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருமான துரைராசா ரவிகரன் மற்றும் முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் இ.மயூரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இதுதொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில், நீதவான் சரவணராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த நீதவான் குறித்த வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் 19 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். குறித்த வழக்கு விசாரணையின்போது ரவிகரன் மற்றும் மயூரன் ஆகியோருக்கு ஆதரவாக நீதிமன்றிற்கு வருகைதந்த அனைத்து சட்டத்தரணிகளும் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தர மாணவர்களுக்கு புலமைப்பரிசில்







(அஷ்ரப் ஏ. சமத்)

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான மொஹமட் அலி ஜின்னாஹ் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (24) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்க்கி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பௌத்த மத மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவும் கௌரவ அதிதியாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவும் கலந்துகொண்டனர்.

மூவின மாணவர்களுக்கும் இப்புலமைப்பரிசில் திட்டம் வருடா வருடம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கிணங்க இம்முறை 87 மாணவிகளுக்கும் 44 மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்க்கி உரையாற்றுகையில், இலங்கை மாணவர்களுக்கு உயர் கல்விக்காக வருடா வருடம் ஜின்னாஹ் புலமைப்பரிசில் திட்டத்தை வழங்கி வருகின்றோம். வைத்தியர்கள், பொறியியலாளர்கள் ஆகியோரையும் உருவாக்கி வருகின்றோம். பாகிஸ்தானில் உள்ள பல்கலைக்கழகங்களில் கற்று இலங்கையில் சேவையாற்றுவதற்கு பாகிஸ்தான் உதவி வருகின்றது எனவும் கூறினார்.

பாக்கிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் இலங்கையில் உள்ள க.பொ.த.உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு 2006ஆம் ஆண்டு முதல் மொஹமட் அலி ஜின்னாஹ் புலமைப்பரிசில் திட்டத்தை வழங்கிவருகிறது. இதுவரை 2,400 மாணவர்கள் மேற்படி திட்டத்தினால் நன்மையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.05.24
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5124 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 8 7 1 3 9 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3366 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,514,772.64
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 27 52 59 66

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1579 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,397,579.60
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 6 3 1 4 1 9

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1154 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,243,146.40
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 41 58 76 78

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 433 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,526,624.20
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 36 39 50 56 — விசேட இலக்கினம் விருச்சிகம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1472 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 324,410,014.00
ஆங்கில எழுத்து U — சுப்பர் இலக்கம் 03 — வெற்றி இலக்கங்கள் 09 17 42 46
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# வடமாகாணத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும்

## அங்கஜன் எம்.பியிடம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதி



வடமாகாணத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதற்கு நான் அனைத்து ஒத்துழைப்புகளையும் நிச்சயம் வழங்குவேன் - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன், அமைச்சர் ஜீவன் தொண்டமானை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பிலுள்ள அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தில் குடிநீர்ப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள கிராமங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு குடிநீரைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். வடக்கின் தற்போதைய நிலைவரம் பற்றியும் அவர் அமைச்சருக்கு தெளிவுபடுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்த விடயங்களைக் கேட்டறிந்துகொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், விரைவில் வடக்கு பகுதிக்கு நேரில் வருவதாகவும் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கத் தன்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

அமரர். சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் அமைச்சர்களாக இருந்தபோது வடக்குக்கு ஆற்றிய சேவைகளை இதன்போது நினைவுகூர்ந்த அங்கஜன், ஜீவன் தொண்டமானும் சிறப்பாக செயற்படுகிறார் என நேரில் பாராட்டுத் தெரிவித்தார்.

# அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணி இராணுவத்திற்காக சுவீகரிக்க முயற்சி

## தடுத்துநிறுத்த பொதுமக்களால் மகஜர் கையளிப்பு



(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினருக்கு சுவீகரித்து வழங்க எடுக்கப்பட்ட முயற்சி அப் பகுதி மக்களாலும் மக்கள் பிரதிநிதிகளாலும் நேற்று வியாழக்கிழமை (25) தடுத்துநிறுத்தப்பட்டது.

குறிப்பாக, நில அளவைத் திணைக்களத்தினர் மற்றும் கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள் குறித்த மாவீரர் துயிலுமில்லக் காணியை அளவீடுசெய்ய வருகைதந்திருந்தனர்.

இந்நிலையில், மாவீரர்களின் பெற்றோர், அப்பகுதி மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சிலரும் குறித்த காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு குறித்த காணியை அளவீடு செய்து இராணுவத்திற்காக சுவீகரிக்கும் நடவடிக்கையை அனுமதிக்கமுடியாதென அப்பகுதி மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் அங்கு வருகைதந்த நில அளவைத் திணைக்கள அதிகாரியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்காக காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டு நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து புறப்பட்டுச்சென்றனர்.

மேலும் குறித்த எதிர்ப்பு நடவடிக்கையில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன், பீற்றர் இளஞ்செழியன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துயன், மாவீரர்களின் பெற்றோர்கள், கிராம மக்கள் ஆகியோர் இணைந்து ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக, அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியை தற்போது 23ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதுடன் அங்கு இரணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகள், இராணுவத்தினருக்கான விளையாட்டு செயற்பாடுகள் இடம்பெறும் இடமாகவும் அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணி காணப்படுகின்றது. அதுதவிர, குறித்த காணியில் இராணுவத்தினரால் உணவகம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில், துயிலுமில்லக் காணியின் வெளிப்புறத்திலேயே வருடாவருடம் மாவீரர் நாள் அஞ்சலிகள் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழலில் அண்மையில் குறித்த மாவீரர் துயிலுமில்லக் காணியை இராணுவத்தினர் விடுவிக்க வலியுறுத்தி மாவீரர்களின் உறவுகள் சிலர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) வருடாந்த திருவிழா நேற்று (25) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ள நிலையில், எதிர்வரும் 02ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும், 03ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

## டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சாவகச்சேரியில் முன்னெடுப்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட நகர சபை மற்றும் பிரதேச சபைப் பகுதிகளில் தொடர்ச்சியாக டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

நாட்டில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில், எதிர்வரும் 30ஆம் திகதிவரை தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடரும் என சுகாதாரப் பகுதியினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தென்மராட்சி பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஆகியன இணைந்து டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எச்.எஸ்.பி.சி. வங்கி அதிகாரிகள் யாழ். பல்கலைக்கு விஜயம்





சர்வதேச முன்னணி வங்கியான எச்.எஸ்.பி.சி. வங்கியின் இலங்கைக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட உயரதிகாரிகள் சிலர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் விஜயம் செய்தனர்.

எச்.எஸ்.பி.சியின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி மார்க் சேர்ஜனர், வங்கியின் பிரதம இடர் முகாமையாளர் கெலும் எதிரிசிங்க, கண்டி கிளையின் முகாமையாளர் கித்மல் விமலவீர, யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் ஏ.சிவானந்தன் அரவிந்தன், சர்வதேச இணை வங்கிச் சேவையின் வாடிக்கையாளர் உறவுகளுக்கான முகாமையாளர் மேனகா சண்முகநாதன் மற்றும் யாழ்ப்பாணக் கிளை அலுவலர் செல்வராசா கேசவன் ஆகியோரே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் பதிவாளர் வி.காண்டீபன் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

# நுவரெலியா கிரகரி வாவி குப்பைகளை அகற்றி தூய்மைப்படுத்த நடவடிக்கை



(செ.திவாகரன்)

நாளாந்தம் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் நுவரெலியா கிரகரி வாவியை சுத்தம் செய்யும் நடவடிக்கைகளை நுவரெலியா மாநகரசபையினர் முன்னெடுத்துள்ளனர்.

கிரகரி வாவியில் பாசிச் செடிகள் படர்ந்து வாவி முழுவதும் குவியல் குவியலாக உள்ளதை அகற்றி கரைகளில் உள்ள புதர்களையும் அகற்றி வாவி முழுவதும் மிதக்கும் பிளாஸ்ரிக் குப்பைகளையும் கழிவுப் பொருட்களையும் அகற்றி சுத்தம் செய்து ஜே.சி.பி. இயந்திரத்தைப் பயன்படுத்தி ஆழப்படுத்தியும் அகலப்படுத்தியும் வருகின்றனர்.

இதன்போது, பெருமளவான கழிவுப்பொருட்கள் வாவிக்கரையிலிருந்து மீட்கப்பட்டன. இது எதிர்காலத்தில் சுற்றுச்சூழலுக்கும் வாவிக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என மாநகரசபை விசேட ஆணையாளர் திருமதி சுஜீவ போதிமான கருத்து தெரிவித்தார்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

## கலைமகள் பாடசாலை மாணவர்களுக்கு பாராட்டு



(கண்டி செய்தியாளர்)

கண்டி கலைமகள் தமிழ் வித்தியாலய மாணவர்கள் அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டியில் கர்நாடக இசைப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றிருந்தனர்.

அதனைப் பாராட்டி அப்துல்கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் இலங்கைக் கிளை அண்மையில் (24) பாராட்டுவைபவத்தை வித்தியாலய மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

அவ்வைபவத்தில் கண்டி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ரமேஷ் பாபு, அப்துல் கலாம் ஞாபகார்த்த அறக்கட்டளையின் இலங்கைக் கிளைத் தலைவர் என். கருணாகரன் உட்பட அதன் நிர்வாகிகள் பலரும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

# ஒழுக்கமுள்ள மாணவர் சமுதாயத்தை கட்டியெழுப்புவது அனைவரதும் பொறுப்பு



## உக்குவளை பிராந்திய கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் நிஸ்பர் தெரிவிப்பு

(உக்குவளை செய்தியாளர்)

மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றி சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது அனைவரதும் பொறுப்பாகுமென உக்குவளை பிராந்திய கல்விஅபிவிருத்திச் சங்கத் தலைவரும் முன்னாள் அதிபருமான எம். நிஸ்பர் தெரிவித்தார்.

உக்குவளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது கல்வி அபிவிருத்திச் சங்கச் செயற்பாடுகள் பற்றித் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உக்குவளையில் 1983இல் குறிப்பிட்ட இப்பெயரில் இச்சங்கம் ஏற்படுத்தப்பட்டு தேவையான கல்வி தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. காலப்போக்கில் இதிலிருந்த செயலூக்கமுள்ள குறிப்பிடத்தக்க ஆசிரிய உறுப்பினர்கள் எம்மைவிட்டுப் பிரிந்துசென்றதுடன் அதன் பணிகளும் இயங்காதுபோயின. எனினும், அவர்களது கல்விச்செயற்பாடுகள் எமக்கு ஒரு படிப்பினை எனலாம். அவற்றை மறப்பதற்கில்லை.

நீண்டகாலத்துக்குப்பின் பலரது வேண்டுகோளுக்கிணங்க இப்பெயரில் சமீபத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் ஏற்பாட்டில் கல்விவளர்ச்சி தொடர்பான பாடசாலை மாணவர்களது பண்பாடுகளுடன் அவர்கள் மத்தியில் இருவேறு நிகழ்ச்சிகளை நடத்தி வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கியுள்ளோம்.

எதிர்காலத்திலும் இதுபோன்ற கல்வி வளர்ச்சிக்கான பயனுள்ள நிகழ்ச்சிகளை நடத்தவும் தீர்மானித்துள்ளோம் அதுமட்டுமன்றி, பிரதேத்திலுள்ள கற்றவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரையும் இணைத்துக்கொண்டு காலத்துக்குகந்த முன்னைற்றகரமான கல்விப் பணிகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.

உக்குவளை பிரதேசம் வளங்கள் கொண்ட ஒரு பிரதேசம் எனலாம். இங்குள்ள பாடசாலைகளில் கற்ற பலர் நல்ல பொறுப்புகளில் பணிசெய்வது நமக்குப் பெருமை. அவர்கள் எமக்கும் எமது பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கத் தவறுவதில்லை. எனவே, மாணவர்களது கல்வி மற்றும் குறிப்பாக, அவர்களை ஒழுக்கமுள்ள நற்பிரஜைகளாக வாழவைப்பது அனைவரதும் கடமையாகும் என்றார்

## கொட்டகலையில் சிறுத்தை தாக்கி காயமடைந்தவர் வைத்தியசாலையில்



(மஸ்கெலியா செயதியாளர்)

திம்புளை- பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டகலை டிரெட்டன் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் தனி குடியிருப்புகளுக்கு பின் உள்ள குழி ஒன்றில் சிறுத்தை இருப்பதாக டிரெட்டன் தோட்டமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்

அவ்விடத்திற்கு பொலிஸார் செல்வதற்கு முன்பாகவே அங்கு மக்கள் கூடியிருந்தனர்.

அப்போது திருமண வைபவத்துக்கு வந்திருந்த பூண்டுலோயா தோட்டத்தைச் சேர்ந்த நபரொருவர் தான் குழிக்குள் இறங்கி சிறுத்தை இருப்பதை பார்க்கப் போகிறேன் என்று இறங்கியுள்ளார்.

அப்போது பதுங்கியிருந்த புலி பாய்ந்து குறித்த நபரைத் தாக்கியுள்ளது. இதன்போது குறித்த நபரை சிறுத்தையிடம் இருந்து மீட்டு கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்து ஆரம்ப கட்ட சிகிச்சைகள் முடிவடைந்த பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த சிறுத்தைப்புலி இன்னும் மீட்கப்படாத நிலையில் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

திம்புல்ல - பத்தனை பொலிஸார் சிறுத்தையைப் பிடித்து வனப் பகுதியில் விடுவதற்கு நல்லதண்ணி மற்றும் நுவரெலியா வனத் துறையினரின் உதவியை நாடியுள்ளனர்.

# நவீன உலகுக்கு பொருந்தும் வகையில் கொள்கைத்திட்டங்களை தயாரிக்கவேண்டும்

## மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்துக்கு கோப் குழு அறிவுறுத்தல்





மகாவலி அதிகாரசபையின் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் கோப் குழுவின் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

மகாவலி அதிகாரசபையின் சேவைகளை வினைத்திறனுடனும் தரத்துடனும் நடைமுறைப்படுத்தத் தவறியதன் காரணமாக அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, அதிகார சபையின் காலாவதியான பணிக்கூற்று மற்றும் பிரதான செயற்றிறன் குறிகாட்டிகள் தொடர்பில் அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

'பிரஜைகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்' அதிகாரசபையின் நோக்குக்கு அமைய பிரதான நோக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அது இடம்பெறாமை தொடர்பில் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே குழுவின் தலைவர் அதிருப்தியை வெளியிட்டார். அதற்கமைய, மகாவலி அதிகாரசபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் சரிபார்க்கப்பட்டு நவீன உலகுக்குப் பொருந்தும் வகையில் கொள்கைத்திட்டங்களை மீண்டும் தயாரிக்குமாறு அவர் மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தல் வழங்கினார். அதேபோன்று அதிகாரசபையினால் காணிகளை ஒதுக்கும் செயன்முறையில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தாமை தொடர்பில் விரிவாக வினவியதுடன் அதனை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கினார்.

காணிகளை உரிமை மாற்றுதல் தொடர்பில் பின்வரும் விடயங்களை முன்வைக்குமாறும் குழு அதிகாரசபைக்கு பணிப்புரை வழங்கியது.

அதாவது, தற்போது காணப்படும் காணிகளின் உரிமை மாற்றுதல் செயன்முறை தொடர்பில் 02 வாரங்களில் அறிக்கை சமர்ப்பித்தல், முதலீட்டு நோக்கங்களுக்காக முன்வைக்கப்படும் காணிகளில் முதலீடு மேற்கொள்பவர்கள் விபரங்கள், முதலீட்டின் நோக்கம், பின்பற்றப்பட்ட நடைமுறை உள்ளிட்ட முழுமையான அறிக்கையை 02 வாரங்களுக்குள் சமர்ப்பித்தல், அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளில் இடம்பெறும் சட்டவிரோதமான நிர்மாணங்கள் தொடர்பில் ஒரு மாதத்தில் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமெனவும் பணிப்புரை வழங்கப்பட்டது.

மகாவலி அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் கண்காணிக்கப்பட்ட தரவுகளுக்குமிடையில் முரண்பாடு உள்ளதால் குறித்த ஆண்டில் விடுவிக்கப்பட்ட அனைத்து காணிகள் தொடர்பிலும் அறிக்கையொன்றை விரைவாக வழங்குமாறும் இதன்போது ஆலோசனை வழங்கப்பட்டது. அந்தக் காணிகளை விடுவிப்பதை இடைநிறுத்துமாறு ஜனாதிபதியும் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலேயே இந்த ஆலோசனை வழங்கப்பட்டது.

அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை இங்கு பரிசீலிக்கப்பட்டதுடன் தற்போதுள்ள உள்ளகப் பணியாளர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்காக நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதில் தாமதம் நிலவுவதாக இதன்போது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய இந்த வெற்றிடங்களை 60 நாட்களுக்குள் நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் பணிப்புரை வழங்கினார் .

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான ஜகத் புஷ்பகுமார, ஜானக வாக்கும்புர, சாந்த பண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அலுத்கமகே, தயாசிறி ஜயசேகர, இரான் விக்ரமரத்ன, ஜயந்த சமரவீர, சஞ்சீவ எதிரிமான்ன, ஜகத்குமார சுமித்ராறச்சி, (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய, பிரேம்நாத் சி. தொலவத்த, எம். ராமேஸ்வரன், ராஜிக்க விக்ரமசிங்க, மதுர விதானகே மற்றும் (பேராசிரியர்) சரித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (25.05.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 193.2296 | 204.5749 |
| கனேடியன் டொலர் | 217.2198 | 229.8467 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.3333 | 44.5116 |
| யூரோ | 318.4855 | 335.4066 |
| ஜப்பான் யென் | 2.1257 | 2.2352 |
| சிங்கப்பூர் டொலர் | 218.9516 | 231.2361 |
| ஸ்ரேலிங் பவுன் | 366.5521 | 384.9328 |
| சுவிஸ் பிரான்ங் | 326.1220 | 345.7903 |
| ஐ.அ. டொலர் | 297.6055 | 310.9562 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 804.3713 |
| குவைட் | குவைட் தினார் | 986.0133 |
| ஓமான் | ஓமான் றியால் | 787.6684 |
| கட்டார் | கட்டார் றியால் | 83.2331 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 80.8650 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 82.5849 |

# சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான பயனாளர்களின் தெரிவில் முறையான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்

## வழிவகைகள் பற்றிய பாராளுமன்றக் குழுவில் வலியுறுத்து






சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான பயனாளர்களின் தெரிவின்போது முறையான நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமென வழிவகைகள் பற்றிய பாராளுமன்றக் குழுவில் வலியுறுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் அண்மையில் கூடிய வழிவகைகள் பற்றிய குழுவிலேயே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அஷ்வசும கொடுப்பனவுத்திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குழுவுக்கு விளக்கமளித்தனர். இடைநிலை, பாதிக்கப்படக்கூடிய, வறிய மற்றும் மிகவும் வறுமையான குடும்பங்களுக்கு 04 பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதோடு அங்கவீனர்கள், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கும் இத்திட்டத்தின் கீழ் நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படவிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்காக 37 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டிருப்பதாகவும் இவற்றில் உண்மையான தேவையுடையவர்களுக்கு இக்கொடுப்பனவு ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

சமுர்த்திக் கொடுப்பனவைப் பெறுபவர்களில் 30 வீதமானவர்கள் அதற்குத் தகுதியற்றவர்கள் என உலக வங்கி சுட்டிக்காட்டியிருப்பதாகவும் இதனைக் கவனத்தில் கொண்டு இத்திட்டத்தில் பயனாளிகளின் தெரிவு இடம்பெற வேண்டுமென்றும் குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

அஷ்வசும கொடுப்பனவுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகள் தொடர்பில் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருதடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் குழு சுட்டிக்காட்டியது.

அதேநேரம், இதற்கு முன்னைய வாரம் இடம்பெற்ற வழிவகைகள் பற்றிய குழுவில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக சுங்கத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை மதுவரித் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சு என்பன அழைக்கப்பட்டிருந்தன. இதில் பாராளுமன்றத்தினால் கோரப்பட்ட அறிக்கைகளை நிதி அமைச்சு சமர்ப்பிக்காமை தொடர்பில் பாராளுமன்றக் குழுவின் தலைவர் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

பாராளுமன்றத்தின் குழுவொன்றினால் அறிக்கைகள் மற்றும் யோசனைகள் கோரப்படும்போது உரிய காலப் பகுதிக்குள் அவற்றை வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்குமாறு அக்குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பி னர்களான வாசுதேவ நாணயக்கார, டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன, வசந்த யாப்பா பண்டார, காமினி வலேபொட, அலி சப்ரி ரஹீம், எஸ்.எம்.எம் முஷாரப், சஞ்ஜீவ எதிரிமான்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.










**தலவாக்கலை சிமிர்னா சிறுவர் முன்பள்ளிப் பாடசாலையின் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் அதன் நிர்வாகி குமாரி ஜோன் தலைமையில் தலவாக்கலை நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. இதன்போது சிறுவர்களுக்கான பலூன் உடைத்தல், முட்டி உடைத்தல், நீர் நிரப்புதல், முயல் ஓட்டம், பணிஸ் உண்ணுதல், அழகுராணிப் போட்டி, வினோத உடை போன்ற பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் முன்பள்ளிச் சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர். ஆசிரியர்களான அமாஷா, மெடோனா, பிலிசியா, மோகன் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.**

(படங்கள்:- பி.கேதீஷ்)

# ஆயிஷா மகளிர் வித்தியாலய மாணவிகளுக்கு சுகநல பாதுகாப்பு தொடர்பான விழிப்பூட்டல்



(மீராவோடை செய்தியாளர்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவிகளுக்கு சுகநல பாது காப்பு தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வு புதன் கிழமை (24) இடம்பெற்றது.

கோறளைப்பற்று வாழைச்சேனை மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் இடம்பெற்றது. இதில், சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப் கான், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.எம்.நௌபர், பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நஸீர், பற்சிகிச்சையாளர் எஸ்.சபாயா மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு உணவு பழக்கவழக்கம், நோய்த்தாக்கம் தொடர்பாக மாணவிகளுக்கு விழிப்பூட்டல்களை வழங்கினர்.

# காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தில் வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜயந்திபுர பகுதியில் காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் வியாழக்கிழமை(25) அதிகாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வான்எல பகுதியைச் சேர்ந்த 50வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான டபிள்யூ.பஸ்நாயக்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வயலுக்கு துவிச்சக்கர வண்டியில் சென்றபோது வான்எல பிரதான வீதியில் மறைந்திருந்து காட்டு யானை தாக்கியுள்ளது. யானையின் தாக்குதலுக்குள்ளான நபரை அருகில் இருந்தவர்களின் உதவியுடன் கந்தளாய் தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கிழக்கிலிருந்து கதிர்காமத்துக்கு முருக பக்தர்கள் பாதயாத்திரை



(பாண்டிருப்பு செய்தியாளர்)

கிழக்கிலிருந்து கதிர்காமக் கந்தனை தரிசிக்க பெருமளவிலான முருக பக்தர்கள் பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளனர். திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்து குழுக்களாகவும் குடும்பமாகவும் இணைந்து பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள கதிர்காமத் திருவிழா ஜூலை 4ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

கடந்த வருடங்களில் கொரோனா பெருந்தொற்று மற்றும் அரசியல், பொருளாதார நெருக்கடி காரணமாக குறைந்தளவிலான பக்தர்கள் பாதயாத்திரையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இம்முறை அவ்வாறில்லாமல் அதிகளவிலான பக்தர்கள் யாத்திரையில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு பாதயாத்திரையில் ஈடுபடுபவர்களுக்கு இந்து ஆலயங்கள், தனவந்தர்கள் அன்னதானம் வழங்கி வருகின்றனர். உகந்தை முருகன் ஆலயத்தினூடாகச் செல்லும் காட்டுப்பாதை எதிர்வரும் ஜூன் 12ஆம் திகதி திறந்து விடப்படவுள்ளது. இப் பாதையூடாக பயணிக்கும் பக்தர்களுக்கு நீர் வசதி உட்பட பல்வேறு சேவைகளை செய்வதற்கு இராணுவத்தினர், தொண்டர் அமைப்புகள் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் இருவேறு இடங்களில் நடமாடும் சேவை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்ட செயலகம், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் தனிநபர்களின் சட்ட ஆவணங்கள் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பது மற்றும் வேறு சட்ட உதவிகளை வழங்குவதற்குமான நடமாடும் சேவை இன்று வெள்ளிக்கிழமை(26) காலை 9.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பங்குபற்றலுடன் நடைபெறும் இந்நிகழ்வில் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்து மீண்டும் குடியிருக்கும் இலங்கை அகதிகள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்காகக் கொண்டு இந்நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளதுடன் ஏனையவர்களும் இச்சேவையில் கலந்துகொண்டு சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகளின் பிரச்சினைகளுக்கு ஒரே நாளில், ஒரே இடத்தில் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான மாபெரும் நடமாடும் சேவை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் நாளை சனிக்கிழமை(27) இடம்பெறவுள்ளது.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சினால், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் காலை 9.00 மணி தொடக்கம் குறித்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இதன்போது மட்டக்களப்பைச் சேர்ந்த பொதுமக்கள் உள்ளிட்ட இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய மட்டக்களப்பைச் சேர்ந்த அகதிகள் உள்ளிட்டோர் குறித்த நடமாடும் சேவையில் கலந்துகொண்டு தங்களது பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக்கொள்ளலாமென அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.



அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியின் பதிவாளராக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றிய எம்.ஏ.சி.றக்கீப் வியாழக்கிழமை(25) தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர், உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முசாபிர், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ஹசன், முன்னாள் பதிவாளர் ஐ.பயாஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.
(கோணாவத்தை செய்தியாளர்)

# 20ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

பெரிய கல்லாறு பகுதியில் அமைந்துள்ள விசேட சோதனை சாவடியில் மோட்டார் சைக்கிளில் கசிப்பு கடத்திச் சென்ற இளைஞனை விசேட அதிரடிப்படையினர் வியாழக்கிழமை(25) கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது மோட்டார் சைக்கிளில் சூட்சுமமாக எடுத்துச் செல்லப்பட்ட கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சோதனை நடவடிக்கையின் போது பெரிய நீலாவணையைச் சேர்ந்த 19 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் உட்பட கடத்திச் செல்லப்பட்ட 20,000 மில்லி லீற்றர் கசிப்பு உள்ளிட்டவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் கைதான சந்தேக நபர் மற்றும் சான்றுப் பொருட்கள் யாவும் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்க விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஹமீடின் மரணம் முஸ்லிம் சமூகத்துக்கு இழப்பு

## கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் மீராசாஹிப்

(கோணாவத்தை செய்தியாளர்)

முன்னாள் முஸ்லிம்காங்கிரஸின் இணைப்புச் செயலாளர் வை.எல்.எஸ்.ஹமீடின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றேன் என முன்னாள் கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்பகால போராளியும் மறைந்த தலைவர் அஷ்ரபுடன் கட்சியின் வளர்ச்சிக்காக முழு மூச்சாக இணைந்து செயற்பட்டவர். ஆங்கில ஆசிரியராக கடமையாற்றி பின்னர் சட்டத்தரணியாகி, சட்டமுதுமாணியாக உயர்ந்தவர் ஹமீட். அதன்பின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளராக செயற்பட்டார். அவரது மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

அவரது மரணம் எமது சமூகத்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அவரது கப்ருடைய வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கு வல்ல இறைவனிடம் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# ஹமீடின் மறைவு முஸ்லிம் சமூகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்

## மு.கா. பதில் பொருளாளர் யஹியாகான் அனுதாபம்

(சாய்ந்தமருது செய்தியாளர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பிரதிச் செயலாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளருமான வை.எல்.எஸ்.ஹமீடின் மரணச்செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் பதில் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

முஸ்லிம் சமூகத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஆளுமைகளில் ஒருவர் வை.எல்.எஸ்.ஹமீட், சட்டத்துறையில் மட்டுமன்றி அரசியலிலும் அதிக அறிவும் ஆற்றலும் அனுபவமும் கொண்ட ஒருவர். முஸ்லிம் காங்கிரஸ் என்பது அவரது தாய்க் கட்சி.

மாமனிதர் மர்ஹூம் அஷ்ரபோடு மிக நெருக்கமாக பழகிய ஒருவர். கட்சியை மக்கள் மயப்படுத்துவதில் தலைவர் அஷ்ரபுக்கு பக்கத் துணையாக நின்றவர். பின்னர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸை உருவாக்குவதில் முதன்மையாக நின்று செயற்பட்டார். கட்சி அரசியல் எவ்வாறாக இருந்தபோதிலும், முஸ்லிம் சமூகத்துக்காக அதிகளவில் குரல் கொடுத்த சமூகப் பற்றாளன் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. உண்மையில் ஹமீடின் இழப்பு முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தண்டப்பணம்

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை(25) ஆஜர்படுத்தியபோது 15ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளினால் குறித்த தண்டப் பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.

# மட்டக்களப்பில் மரமுந்திரிகை விளைச்சல் பாரிய வீழ்ச்சி

(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கை அறுவடை ஆரம்பித்திருக்கிறது. இருந்தபோதிலும், இம்முறை மரமுந்திரிகைச் செய்கை விளைச்சல் பாரிய வீழ்ச்சியைத் தந்திருப்பதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் அடிக்கடி பெய்த மழை மற்றும் கடுமையான வெப்பமான காலநிலையே இதற்கான காரணமென கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் பூக்கள் கருகி காய்க்கும் வீதம் பெருமளவில் குறைவடைந்துள்ளதாகவும் இதன் காரணத்தால் மரமுந்திரிகைச் செய்கையாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் இம்முறை 400 ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகைச் செய்கை பண்ணப்பட்டதாக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபன மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் எச்.பி.டி.தயாரத்ன தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேச செயலகப்பிரிவுகளில் அதிகளவில் மரமுந்திரிகை செய்யப்பட்டதாகவும் வாழைச்சேனை, கிரான், செங்கலடி, வாகரை பிரதேச செயலகப்பிரிவுகளிலும் மரமுந்திரிகைச் செய்கை பண்ணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில் அதிகளவான மரமுந்திரிகைப் பழங்கள் தெருவோரக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







மருதமுனை அல்-மனார் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் அமைப்பான 'அல்-மனாரீயன் 89ஆம் ஆண்டு உயர்தர பழைய நண்பர்கள்' அமைப்பின் ஒன்றுகூடலும் மேலங்கி அங்குரார்ப்பண நிகழ்வும் பாடசாலை பிரதான மண்டபத்தில் புதன்கிழமை(24) இடம்பெற்றது. அமைப்பின் அங்கத்தவர்களான கல்முனை ஆதார வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் ஏ.டபிள்யூ.எம்.சமீம், கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி றைசுல் ஹாதி, கல்முனை வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், மருதமுனை அல்-மனார் தேசிய பாடசாலை அதிபர் இப்றாலெவ்வை உபைதுல்லா, தென்கிழக்கு பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அஹமட், சமுர்த்தி முகாமையாளர் எம்.ஐ.எம்.முஸீப் உட்பட ஏனைய துறை சார்ந்தவர்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.
(பாறுக் ஷிஹான்)

# முஸ்லிம்களின் உரிமைக்குரலின் இழப்பு பேரதிர்ச்சியளிக்கிறது

## அ.இ.ம.காங்கிரஸின் கல்முனை அமைப்பாளர் அப்துல் மனாப்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

முஸ்லிம்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களில் அக்கறையுடன் பணியாற்றிய ஒருவர். முஸ்லிம்களின் தேசிய பிரச்சினைக்கான தீர்வு குறித்து எப்போதும் பேசிக்கொண்டிருந்தவர் வை.எல்.எஸ்.ஹமீட். அவரது இழப்பு கல்முனைக்கு மட்டுமல்ல, நாட்டு முஸ்லிம்களுக்கும் பேரிழப்பாகும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்முனை அமைப்பாளரும் முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான எம்.ஐ.எம்.அப்துல் மனாப் தெரிவித்துள்ளார்.அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கல்முனை மண்ணின் மூத்த அரசியல்வாதியான ஹமீட் மொழியாற்றலும் விவாதத் திறமையும் கொண்ட அரசியல் வியூகங்கள் அறிந்த ஆளுமை. அவரின் இழப்புச் செய்தி மிகவும் வேதனையளிக்கிறது.

சமூக விடுதலைக்கான போராட்டத்தில் எப்போதுமே தன்னை இணைத்துக்கொண்ட முன்னிலை போராளியான சட்டத்தரணி வை.எல்.எஸ்.ஹமீட், பிழையான அரசியல் கலாசாரத்தை ஒதுக்கி முஸ்லிம்களின் விடுதலைக்கான பயணத்தை மீள ஆரம்பித்தவர். மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் நம்பிக்கைக்கு மட்டுமல்ல முஸ்லிம்களின் நம்பிக்கைக்கும் எப்போதும் தகுதியானவராக தன்னை வளர்த்துக்கொண்டவர். மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபின் பிரத்தியேகச் செயலாளர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகம், திறமையான சட்டத்தரணி, சமூகத்தை நேசித்த அரசியல்வாதி, கல்முனை மண்மீது பற்று கொண்ட ஹமீடின் காலமான செய்தியறிந்து கவலையடைந்தேன்.

அன்னாரின் இழப்பில் கவலையடைந்துள்ள அவரது குடும்பத்தினர், எமது கட்சி நண்பர்கள், ஆதரவாளர்கள், எல்லோருக்கும் எனது ஆறுதல்களை தெரிவித்து கொள்கிறேன். அவர் செய்த அத்தனை விடயங்களையும் ஏற்று, அவரது சமூகப் பணிகளை பொருந்திக் கொண்டு பாவங்களை மன்னித்து உயரிய சுவர்க்கமான ஜன்னத்துல் பிர்தௌஸ் வழங்க எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# தென்கிழக்கின் அரசியல் சொத்து அஸ்தமனமாகியது

## முஷாரப் எம்.பி. இரங்கல்

(திகாமடுல்ல செய்தியாளர்)

இன்று (2023.05.25) வபாத்தாகிய தென்கிழக்கு முஸ்லிம் அரசியல் முதுசம், அரசியல் ஆய்வாளர், சமூக செயற்பாட்டாளர், சட்ட முதுமாணி வை.எல்.எஸ்.ஹமீடின் திடீர் மறைவு நீங்காத துயரைத் தருகிறது.

மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் பாசறையிலே தன்னை வார்த்துக்கொண்டு தன் வாழ்வின் பெரும்பகுதியை முஸ்லிம் அரசியல் விடுதலைக்காக அர்ப்பணம் செய்தவர். பின்நாட்களில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியை கிழக்கில் பரிணமிக்கச் செய்ய கால்கோளாய் நின்று உழைத்து, புதிய அரசியல் கலாசாரமொன்றை உதயமாக்குவதற்கு பெரிதும் முயற்சித்தவர்.

பிரதிநிதித்துவ அரசியலில் பெரும்பாலும் நாட்டமின்றியவர். இளைய தலைமுறையினரை சமூக சிந்தனை மிக்க அரசியலின் பக்கம் அணிதிரட்ட தன்னாலான பணிகளை கட்சிகள் தாண்டி விஸ்தரித்த சகோதரர் வை.எல்.எஸ்.ஹமீட் நிச்சயமாக முஸ்லிம் அரசியலுக்கு ஒரு வெற்றிடம் என்பதை எதிர்காலத்தில் எல்லோரும் உணர நேரிடும்.

கடந்த பொதுத்தேர்தலில் என்னோடு சேர்ந்து ஓரணியில் போட்டியிட்டு அம்பாறை மாவட்டத்தின் பரவலான மக்கள் ஆதரவைப்பெற்ற வை.எல்.எஸ்.ஹமீட் தனிப்பட்ட ரீதியில் என்னோடு சிநேகபூர்வ உறவை எப்போதும் வைத்துக்கொண்டவர். முஸ்லிம் அரசியலின் புதிய பரிணாமம், எதிர்கால அரசியல் சிக்கலுக்குள் தென்கிழக்கின் அரசியல் ஆன்மாவை உயிர்ப்புடன் வைத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்,

மாறி மாறி வரும் அரசாங்கங்களோடு எத்தகைய அரசியல் வியூகத்தை முஸ்லிம் தரப்பு கையாள வேண்டும் என்றெல்லாம் என்னோடு நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டவர் சகோதரர்.

அந்திம காலங்களில் குழப்பமான சட்ட நுணுக்கங்களையும் சட்ட ஏற்பாடுகளையும் மக்கள் தெளிவடையும் பொருட்டில் அவற்றை எழுத்துருவில் கொடுத்த பயனுள்ள எழுத்தாளராகவும் சமூகத்துக்கு தொண்டாற்றியவர். இத்தகைய சமூகப் பணிகளை இடைவிடாது செய்து முஸ்லிம் அரசியல் மீது தன் பார்வைகளை எப்போதும் குவித்த நேர்மையான உள்ளம் கொண்ட சகோதரரின் திடீர் இழப்பு பெரும் கவலை தருகிறது.

வல்லோன் இறைவன், அவர் செய்த நற்கருமங்களை பொருந்திக் கொண்டு அவரது கப்று வாழ்விலும் மறுமை வாழ்விலும் மகத்தான வெற்றியைக் கொடுக்க எல்லோரும் பிரார்த்திப்போம்.

# முஸ்லிம் சமூகத்தின் உரிமைக்குரல் ஓய்ந்துபோனது

## சட்டத்தரணி ஹமீடின் மறைவுக்கு ஹரீஸ் எம்.பி. அனுதாபம்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் இன்று (வியாழக்கிழமை 25) காலை காலமானதாக வந்த செய்தியறிந்து பேரதிர்ச்சி அடைந்தேன். முஸ்லிம் சமூகத்தின் உரிமைக்குரல் ஒன்று ஓய்ந்து போனது. அவர் மிகத் திறமை கொண்ட சமூகப்பற்றுள்ள முஸ்லிம் தலைவர் என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வினைத்திறனான போக்குக் கொண்ட வை.எல்.எஸ்.ஹமீட் எனும் ஆளுமை பெருந்தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எச்.எம்.அஷ்ரபின் முதலாவது பாராளுமன்ற பிரவேசத்தின் பின்னர் பிரத்தியேக செயலாளராகப் பொறுப்பேற்றுக்கொண்ட காலப்பகுதியில் பாடசாலை மாணவராக இருந்த எனக்கும் அவருக்குமான நெருங்கிய உறவு ஆரம்பித்தது. அப்போதிருந்தே அவரை நான் கவனித்துள்ளேன்.

முஸ்லிம்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களில் நிறைந்த அக்கறையுடன் பணியாற்றிய ஒருவர். பெருந்தலைவர் அஷ்ரபின் மறைவுக்கு பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் இணைந்து தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, அதிலும் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அதிகார அலகு சம்பந்தமாக, கரையோர மாவட்ட அலகு சம்பந்தமாக மட்டுமன்றி, கல்முனை பிரச்சினைகளில் கூட இதயசுத்தியுடன் தனது இறுதி மூச்சுவரை செயற்பட்டவர்.

குறிப்பாக, கல்முனை முஸ்லிம்களின் உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது என்பதை உளமார சிந்தித்த ஒருவரே வை.எல்.எஸ்.ஹமீட். மிக அண்மையில் கூட கல்முனை விவகாரம் தொடர்பிலான வழக்கு தொடர்பில் அவரது தெஹிவளை வீட்டில் அவரை நானும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான கலீலுர் ரஹ்மானும் சந்தித்து இரண்டு மணித்தியாலயங்களுக்கும் மேலாக கலந்துரையாடினோம். அப்போது கல்முனை முஸ்லிம்களின் இருப்புக்கான விடயங்களை மனம்விட்டுப் பேசிய அவர், சட்ட நுணுக்கங்களையும் எங்களுக்கு எடுத்துரைத்தார்.

அந்தச் சந்திப்பின் போதான நினைவுகள் என்னை மீட்டிக்கொண்டிருக்கின்றன. இன்று அவர் எங்களோடு இல்லை என்ற விடயம் என்னை கடுமையாக கவலையடையச் செய்கிறது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸை ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராக இருந்து கட்டமைத்து உருவாக்கிய வினைத்திறன் கொண்ட முஸ்லிம் தலைமைகளில் இவரும் ஒருவர். பல்துறைகளிலும் பிரகாசித்து எம்மைவிட்டு மறைந்த அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவரும் நானும் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து எதிரெதிர் முகாம்களில் அரசியல் செய்திருந்தபோதிலும் கண்ணியமான முறையில் தேர்தல் நடவடிக்கைகளை



மேற்கொண்டது மட்டுமில்லாமல், அரசியல் நாகரீகங்களுடன் சரி, பிழைகளைச் சுட்டிக்காட்டிய அவரின் அரசியல் நடத்தைகளை மறக்கமுடியாது.

இவரது இழப்பு விசேடமாக கல்முனைக்கும் நாட்டு முஸ்லிம்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பில் துயருற்ற அவரது குடும்பத்தினர், நண்பர்கள், ஆதரவாளர்கள் எல்லோருடைய கவலையையும் நீக்கி இறைவன் நிம்மதியைக் கொடுக்க இறைவனை பிரார்த்திக்கிறேன். மேலும் அவரது சமூகப்பணிகளை பொருந்திக்கொண்டு உயரிய சுவர்க்கமான ஜன்னத்துல் பிர்தௌஸை வழங்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தில் அசமந்தப்போக்கு

## ஆளுநரை தலையிடுமாறு கோரிக்கை



(பாறுக் ஷிஹான்)

புதிய ஆளுநர் எமது இடமாற்ற விடயத்தில் அக்கறை மேற்கொண்டு உரிய முறையில் நடைமுறைப்படுத்த ஆவன செய்வாராயின் மனித உரிமை ஆணைக்குழுவில் இடமாற்றம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டை தாம் மீள வாபஸ் பெறத் தயாராக உள்ளதாக அனைத்து முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத் தலைவர் ஏ.ஜி.முபாறக் தெரிவித்தார்.

முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் தொடர்பில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.ஜி.அப்துல் அஸீஸ் ஊடாக முறைப்பாட்டை புதன்கிழமை(24) கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மனித உரிமை ஆணைக்குழுவில் உரிய முறையில் வருடாந்த இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பாக முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டிருந்தோம். கிழக்கு மாகாணத்தில் வருடாந்த இடமாற்றம் தற்போது இடம்பெற்று வருகின்றபோதிலும், நிறுவனங்களின் தலைவர்கள் உரிய காலங்களில் உத்தியோகத்தர்களுக்கு விடுவிப்பு வழங்காமையினால் இடமாற்றம் என்பது தேவையற்ற ஒன்றாக மாறி வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பிரதம செயலாளர், நிர்வாகத்துக்கான பிரதிப் பிரதம செயலாளர், இவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளோம். ஆனால், இந்தக் கடிதங்கள் தொடர்பில் இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் கடிதங்களை அனுப்பியிருந்தோம். எனினும், எதுவித பதிலும் எமக்கு வழங்கப்படாமையினால் மனித உரிமை ஆணைக்குழுவில் தஞ்சமடைந்துள்ளோம். கிழக்கு மாகாணத்தில் விடுவிப்பு செய்யப்படாமல் இருக்கின்ற பெரும்பாலான அலுவலகங்கள் இருக்கின்றன. இதில் சகல அலுவலகங்களுக்கு எதிராகவும் முறைப்பாடுகளை மேற்கொள்ள இருக்கின்றோம்.

தற்போது முதல் கட்டமாக 5 அலுவலகங்களுக்கு எதிராக முறைப்பாடுகளைச் செய்துள்ளோம். அந்த வகையில், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைப் பணிமனை, அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகம், சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகம், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அக்கரைப்பற்று மாநகர சபை உள்ளிட்டவற்றுக்கு முறைப்பாடுகளைச் செய்துள்ளோம்.

2020, 2021, 2022ஆம் ஆண்டு இடமாற்றங்கள் இடம்பெறவில்லை. 2023ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் இடமாற்றம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இதுவரை உரிய முறையில் விடுவிப்பு செய்யப்படாமல் இருக்கின்றார்கள். இவ்வாறு விடுவிப்பு செய்யப்படாமல் இருப்பதனால் சில அலுவலகங்களில் மேலதிக ஆளணி அதிகரித்துள்ளது. இன்னும் சில அலுவலகங்களில் ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் தங்களது சேவைகளை உரிய காலங்களில் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதேவேளை, சில அலுவலகங்களில் ஆளணி மேலதிகமாக இருப்பதனால் முழுமையான கடமைப் பொறுப்புகள் வழங்கப்படாமலும் இருக்கின்ற சூழல் காணப்படுகின்றது. இந்நிலைக்கு நிறுவனத் தலைவர்களின் அசமந்தப் போக்கே காரணமாகும்.

எனவே, இவ்வாறான விடயங்களை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கிலேயே நாங்கள் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளோம். எனவே, புதிய ஆளுநர் எமது விடயத்தை கருத்தில்கொண்டு முறையாக நடைமுறைப்படுத்துவாராயின் மனித உரிமை ஆணைக்குழுவில் இடமாற்றம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டை நாம் வாபஸ் பெறத் தயாராக உள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதன்போது அனைத்து முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத் தலைவர் ஏ.ஜி.முபாறக், சங்கத்தின் பிரதிச் செயலாளர் கே.எம்.பாயிஸ், பொருளாளர் யு.எல்.எம்.ஜவ்பர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சட்டத்தரணி ஹமீட் முஸ்லிம் சமூகம் இழந்திருக்கும் புலமைச் சொத்து

## அல்-மீஸான் பௌண்டேஷன் - ஸ்ரீலங்கா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிப்பு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

பேச்சாற்றல், எழுத்தாற்றல், விவாதத்திறமை, சமூக உணர்வு, சட்ட தேர்ச்சி கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் காலமானதாக வந்த செய்தி பேரதிர்ச்சியாக உள்ளது என அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மும்மொழி ஆற்றல், வினைத்திறனான போக்குக் கொண்ட வை.எல்.எஸ்.ஹமீட் எனும் ஆளுமை முஸ்லிம்களின் பெருந்தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் பிரத்தியோக செயலாளராகப் பொறுப்பேற்று அப்போதிருந்தே முஸ்லிம்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களில் நிறைந்த அக்கறையுடன் பணியாற்றிய ஒருவர். பெருந்தலைவர் அஷ்ரபின் மறைவுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர்களுடன் இணைந்து தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு அதிலும் கிழக்கு, வடக்கு மாகாண முஸ்லிம்களின் அதிகார அலகு சம்பந்தமாக, கரையோர மாவட்ட அலகு சம்பந்தமாக மட்டுமன்றி, தனது இறுதி மூச்சுவரை சமூக நலன் கொண்ட முஸ்லிம் அரசியல்வாதியாக இருந்தவர்.

முஸ்லிம் தனியார் சட்டங்கள், இனப்பிரச்சினைக்கான தீர்வு, சட்டப் பிரச்சினைகள் உட்பட பொது மக்களினது உரிமைகள் தொடர்பிலானதும் நாட்டின் சட்டங்கள் தொடர்பிலும் பல்துறை சார்ந்த விடயங்களில் நிறைந்த அறிவைக் கொண்டிருந்த சட்டமுதுமாணியான வை.எல்.எஸ்.ஹமீட், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர். வினைத்திறன் கொண்ட முஸ்லிம் தலைமைகளில் ஒருவர். பல்துறைகளிலும் பிரகாசித்து எம்மைவிட்டு மறைந்த அவரின் இழப்பு இந்த நாட்டு முஸ்லிம்களுக்கு பேரிழப்பாகவே உள்ளது. அவரின் இழப்பில் துயருற்ற எல்லோருடைய கவலையையும் நீக்கி இறைவன் நிம்மதியை கொடுக்கவேண்டும் என்றும் அவரது சமூகப்பணிகளை பொருந்திக்கொண்டு உயரிய சுவர்க்கத்தை வழங்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

## நொச்சிக்குளம் பகுதியில் சம்பவம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, நொச்சிக்குளம் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த ராசதுரை சுதாகரன் (27வயது) என்பவரே வியாழக்கிழமை(25) அதிகாலை உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

குடும்பத் தகராறு காரணமாக மனைவி தனது பிள்ளையுடன் மட்டக்களப்பில் வாழ்ந்து வந்துள்ளதாகவும் தொலைபேசியில் இருவருக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்த நிலையில் குறித்த நபர் தூக்கில் தொங்கியிருக்கலாம் எனவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

இருந்தபோதிலும், குறித்த சடலத்தை திருகோணமலை திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எஸ்.எம்.றூமி பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசியல் ஆய்வாளரை சமூகம் இழந்துவிட்டது

## கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

ஒரு சிறந்த அரசியல் ஆய்வாளரை முஸ்லிம் சமூகம் இழந்து விட்டது என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார். வை.எல்.எஸ்.ஹமீடின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் இணைப்புச் செயலாளர் வை.எல்.எஸ்.ஹமீடின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றேன். முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சிக்கு மறைந்த மாபெரும் தலைவர் அஷ்ரபுடன் இணைந்து செயற்பட்ட ஒருவர்.

ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய அவர், அரசியல் துறையிலும் ஓர் ஆய்வாளராக செயற்பட்டவர். அதன்பின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளராக செயற்பட்டவர்.

என்னுடைய நல்ல நண்பர். ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். ஒரு சிறந்த அரசியல் ஆய்வாளரை சமூகம் இழந்து விட்டது. சமூகத்துக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை தனது எழுத்துகள் மூலம் தீர்க்க வழி சமைத்தவர். அவரது மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பாகும் எனத் தெரிவித்துள்ளார்.

# அரசினால் வழங்கப்படும் கொடுப்பனவு இதுவரை வைப்பிலிடப்படவில்லை

## மட்டக்களப்பு விவசாயிகள் சுட்டிக்காட்டு

(துறைநீலாவணை செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கஷ்டப் பிரதேச விவசாயிகளுக்கு கடந்த பெரும்போக வேளாண்மைச் செய்கையின்போது விவசாயிகளின் நலன்கருதி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஏக்கருக்கு நான்காயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரைக்கும் பல விவசாயிகளுக்கு குறித்த கொடுப்பனவுத் தொகை அவர்களின் வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடப்படவில்லை என விவசாயிகள், பிரதேச விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பெரும்போக வேளாண்மைச் செய்கை நிறைவுற்று தற்போது சிறுபோக விவசாய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் அதிகளவான விவசாயிகளுக்கு ஏன் பணம் வைப்பிலிடப்படவில்லை என்பது பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் கேள்வியாகும். இது தொடர்பாக கமநல கேந்திர நிலைய விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் தாம் வினவியபோது, பணமானது கட்டங்கட்டமாக வைப்பிலிடப்படும் எனக் கூறியதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற எந்தச் செயற்பாடுகளும் சாதாரண குடிமக்களுக்கு ஒரே நேரத்தில் சென்றடைய வேண்டும். மாறாக, உதவிகள் ஒருவருக்குக் கிடைத்து இன்னுமொருவருக்கு கிடைக்காது காலதாமதம் ஏற்படுத்துவது விவசாயிகள் மத்தியில் அரசாங்கம் தொடர்பாக உள்ள நல்லெண்ணத்தை சீர்குலைக்கும்.

விவசாயத்தை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொள்ளும் தமது நலனைக் கருத்திற்கொண்டு விவசாயத்துறைசார் அதிகாரிகள் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளவேண்டுமென பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மாதாந்த உதவிக் கொடுப்பனவை அதிகரிக்கக்கோரி மகஜர் கையளிப்பு



(திராய்க்கேணி செய்தியாளர்)

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுவரும் சேவைகளில் மிகப் பிரதானமான சேவையாக பொதுஜன மாதாந்த உதவிக் கொடுப்பனவு இருந்தும்கூட அதனால் மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லாமல் காணப்படுவது கவலையளிக்கிறது.

இதில் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும் 250 ரூபா ஆகும். இத்தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரபிடம் கிழக்கு மாகாண சமூக சேவைகள் தொழிற்சங்கத்தின் செயலாளர் ஏ.ஜி.அர்சாதினால் மகஜர் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமூகப் பிரிவில் இடம்பெற்றது.

சமூகத்தில் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்ற மக்களுக்காக வழங்கப்படும் இச்சிறிய கொடுப்பனவைப் பெறுவதற்கு பல பயனாளிகள் இத்தொகையை விடவும் கூடுதலான தொகையை பிரயாண செலவுக்காகச் செலுத்தவேண்டியுள்ளது. தபால் நிலையங்கள் மற்றும் பஸ் வசதி அற்ற கிராமங்களில் உள்ள மக்கள் முச்சக்கர வண்டி அல்லது நீண்ட தூரம் கால்நடையாக தபால் நிலையங்களுக்கு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆகவே, மேற்படி விடயங்களை கருத்திற்கொண்டு குறைந்தபட்சம் குறித்த பொதுஜன மாதாந்த உதவிக் கொடுப்பனவை ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதன் மூலம் மக்களுக்கு பிரயோசனப்படும் சேவையாக இச்சேவையை மாற்றுவதற்கு முஷாரப் எம்.பி. நடவடிக்கை மேற்கொள்வார் எனத் தாம் எதிர்பார்ப்பதாக குறித்த தொழிற்சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர், உதவி பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். மேலும் இதன் பிரதி ஒன்று கிழக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



புலிகளிட தலைவர் செத்துப்போய்தாராம் எண்டு 14, வருஷத்துக்குப்புறகுதான் மட்டக்களப்பு பொடியன் தயாமோகன கொண்டு வெளிநாட்டுல இருக்கிற புலி உறுப்பினர்கள் சொல்ல வச்சியிருக்காங்க எலுவா? அவர் இல்லை எண்டத ஏண்டா இவ்வளவு காலமும் சொல்லாம மறச்சிப்போட்டு இப்ப சொல்லுறயள்.. அதுவும் ஏன்டாம்பி மட்டக்களப்பு பொடியனக்கொண்டு சொல்ல வச்சியல்.. அவர் இல்ல எண்டு சொல்லுறவங்கள துரோகிப்பட்டம் கொடுக்கிறத்துக்காகவோ இந்த நாடகம்

## உலகின் பரிதாபமான நாடுகள்:

# முதலிடத்தில் சிம்பாப்வே; 11ஆவது இடத்தில் இலங்கை

உலகின் பரிதாபமான நாடுகளின் பட்டியலில் தென்னாபிரிக்க நாடுகளில் ஒன்றான சிம்பாப்வே முதலிடத்திலுள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கை 11ஆவது இடத்திலும் சுவிட்சர்லாந்து கடைசி இடத்திலும் உள்ளன.

2022ஆம் ஆண்டுக்கான மகிழ்ச்சியில்லாத அல்லது பரிதாபமான நாடுகளின் பட்டியலை சர்வதேச பொருளாதார நிபுணர் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் மொத்தம் 157 நாடுகள் இடம்பிடித்துள்ளன. வருமானம், சமூக ஆதரவு, ஆரோக்கியம், சுதந்திரம், தாராள மனப்பான்மை மற்றும் ஊழல் இல்லாமை ஆகியவை மகிழ்ச்சியை அளவிடும் காரணிகளாகக் கருதப்பட்டன. அதன்படி 244% பணவீக்கம் மற்றும் வேலை வாய்ப்பின்மையால் பொருளாதாரத்தில் தத்தளித்து வரும் சிம்பாப்வே முதலிடத்திலுள்ளது.

போரால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளான பாகிஸ்தான், ரஷ்யா, உக்ரைன், சிரியா, சூடான் போன்ற நாடுகளை விட சிம்பாப்வேயில் பணவீக்க விகிதம் அதிகமாகும். இதற்கு காரணம் ஆளுங்கட்சியான சிம்பாப்வே ஆபிரிக்க தேசிய கூட்டமைப்பின் தவறான பொருளாதார கொள்கைகளே என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நீண்ட நாட்கள் அங்கு ஜனாதிபதியாக இருந்தவரும் 2019ஆம் ஆண்டு இறந்தவருமான ரொபர்ட் முகாபேவே இதற்கு காரணம் எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. துக்கமான நாடுகளின் பட்டியலில் 10 இடங்களில் வெனிசுலா, சிரியா, லெபனான், சூடான், ஆர்ஜென்டீனா, யேமன், உக்ரைன், கியூபா, துருக்கி, இலங்கை, ஹெய்ட்டி ஆகிய நாடுகள் உள்ளன. இந்தப் பட்டியலில் 103ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. துக்கமான நாடுகளின் பட்டியலில் கடைசி இடத்தை சுவிட்சர்லாந்து பிடித்துள்ளது. அமெரிக்கா 134ஆவது இடத்திலுள்ளது.

**Hanke's Annual Misery Index 2022: The World's Fifteen Most Miserable Countries**

Misery Index Score = [(Unemployment * 2) + Inflation + Bank-Lending Rate] - Real GDP Per Capita Growth
A higher Misery Index Score reflects a higher level of misery in a country.

| Rank | Country | Unemployment Rate (%) | Inflation Rate (%) | Bank-Lending Rate (%) | Real GDP Per Capita Growth (%) | Misery Index Score | Major Contributing Factor |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Zimbabwe | 20 | 243.8 | 131.8 | 0.9 | 414.7 | Inflation |
| 2 | Venezuela | 33.5 | 266.9 | 11.1 | 14.2 | 330.8 | Inflation |
| 3 | Syria | 57 | 94.9 | 14 | -2.5 | 225.4 | Unemployment |
| 4 | Lebanon | 29 | 121.599 | 5.338 | -5 | 190.337 | Inflation |
| 5 | Sudan | 30.6 | 87.3 | 24.4 | -3.2 | 176.1 | Inflation |
| 6 | Argentina | 7.1 | 94.793 | 52.399 | 5.2 | 156.192 | Inflation |
| 7 | Yemen | 13.6 | 53.2 | 34 | -1.8 | 116.2 | Inflation |
| 8 | Ukraine | 19.9 | 26.603 | 18 | 25.6 | 110.003 | Unemployment |
| 9 | Cuba | 3 | 96.8 | 2.5 | 3.3 | 102 | Inflation |
| 10 | Turkey | 10.475 | 64.34 | 21.333 | 5.023 | 101.601 | Inflation |
| 11 | Sri Lanka | 6.5 | 57.207 | 20.127 | -9.3 | 99.634 | Inflation |
| 12 | Haiti | 14.8 | 48.1 | 15 | -2.7 | 95.4 | Inflation |
| 13 | Angola | 29.6 | 13.9 | 20.118 | -0.3 | 93.518 | Unemployment |
| 14 | Tonga | 33.2 | 11.3 | 7.9 | -2.5 | 88.1 | Unemployment |
| 15 | Ghana | 3.9 | 54.1 | 26.2 | 1.3 | 86.8 | Inflation |

Sources: Economist Intelligence Unit (including estimates), International Monetary Fund World Economic Outlook, World Bank, International Labor Organization (including estimates), and individual Central Banks and Statistical Institutes of each country.
The inflation rate for Lebanon only was taken from FocusEconomics. Data as of 3 April 2023.
Note: The "Major Contributing Factor" to each country's Misery Index Score is highlighted in yellow. The "Major Contributing Factor" refers to the highest data point in a country among unemployment multiplied by 2, inflation, lending rate, and real GDP per capita growth.
Calculations by Professor Steve H. Hanke, The Johns Hopkins University

# இந்திய புதிய பாராளுமன்றத்தை திறந்து வைப்பது யார்?






**உலக செய்திகள்**

இந்தியாவின் புதிய பாராளுமன்றக் கட்டடத்தொகுதி எதிர்வரும் 28ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இதில் வரலாற்றுச் சிறப்புமிக்க சோழர் கால மாதிரி செங்கோலை மக்களவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே பிரதமர் மோடி நிறுவவுள்ளார். இது குறித்த செய்திகள் தற்போது உலக அரங்கில் பேசுபொருளாகியுள்ளன.

இந்நிலையில், புதிய பாராளுமன்றக் கட்டடத் தொகுதியை யார் திறந்து வைக்கப்போகிறார்கள் என்பது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாராளுமன்ற புதிய கட்டடத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கவுள்ளதுடன் இதன்போது பிரதமரிடம் தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோல் வழங்கப்படும் என உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிவித்திருந்தார்.

இந்நிலையில், புதிய பாராளுமன்றக் கட்டடத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைப்பதற்கு எதிர்க்கட்சிகள் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளன. அதோடு சுமார் 20 எதிர்க்கட்சிகள் இந்த விழாவை புறக்கணிக்கவும் முடிவு செய்துள்ளன. இந்தச் சூழலில் புதிய பாராளுமன்றக் கட்டடத்தை குடியரசுத் தலைவர்தான் திறந்து வைக்கவேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனினும், பாராளுமன்ற திறப்புக்கு குடியரசு தலைவருக்கு இதுவரை அழைப்பு விடுக்கப் படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க, புதிய பாராளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் மோடியால் நிறுவப் படவுள்ள செங்கோல் குறித்த சுவாரஷ்யமான தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த செங்கோலின் பின்னணியில் பல நூறு ஆண்டுகளின் வரலாறு உள்ளது. 1947இல் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கும் வேளை நெருங்கிய போது, ஆட்சி மாற்றத்தை எதன் மூலம் குறிப்பது என்று பிரித்தானிய அரசின் அப்போதைய ஆளுநர் ஜெனரல் லோர்ட் மவுன்ட் பேட்டன் ஜவஹர்லால் நேருவிடம் கேள்வி எழுப்பினார். இதுகுறித்து மூதறிஞர் ராஜாஜியிடம் நேரு ஆலோசித்தபோது, முற்கால தமிழ்நாட்டில் மன்னர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது செங்கோல் வழங்கும் பழக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டு அதையே இப்போதும் செய்யலாம் என்று யோசனை கூறினார் ராஜாஜி. இதை நேருவும் ஏற்றுக் கொண்டதையடுத்து, செங்கோலை உருவாக்கும் பொறுப்பு திருவாடுதுறை ஆதீனம் அம்பலவான தேசிகரிடம் வழங்கப்பட்டது.

திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த குமாரசாமி தம்பிரான், மாணிக்கம் ஓதுவார் ஆகியோர் சிறப்பு விமானத்தில் டில்லிக்குச் சென்று 1947 ஒகஸ்ட் 14ஆம் திகதி இரவு 11.45 மணிக்கு செங்கோலை மவுன்ட் பேட்டனிடமிருந்து வாங்கி நேரு கையில் வழங்கினார். டி.என். ராஜரத்தினம் நாதஸ்வரம் ஒலிக்க அரசியலமைப்பு நிர்ணய மன்றத்துக்கு உரிய மரியாதையுடன் கொண்டு சென்று வைக்கப்பட்டது. பின்னர் அலகாபாத் அருங்காட்சியகம் ஒன்றில் இதுவரை வைக்கப்பட்டிருந்தது. தற்போது பிரதமர் கையில் தவழ்ந்து புதிய பாராளுமன்றக் கட்டடத்திற்குள் மீண்டும் ராஜ மரியாதையுடன் நுழையவுள்ளது.

அழகிய வேலைப்பாடுகளுடன் சொக்கத் தங்கத்தால் செய்யப்பட்டுள்ள இந்தச் செங்கோலின் தலைப் பகுதியில் சிவனின் வாகனமான நந்தி இடம் பெற்றுள்ளது. சென்னையிலுள்ள நகை வடிவமைப்பாளர் ஒருவர் உருவாக்கிய இது, 8ஆம் நூற்றாண்டின் சோழ மன்னர்கள் பயன்படுத்திய செங்கோலை மாதிரியாகக்கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.



**படத்தில் நீங்கள் காண்பது உலகின் மிக விலை உயர்ந்த மாம்பழமாகக் கருதப்படும் மியாஸகி மாம்பழங்கள்.**

**கர்நாடகாவின் கோபால் மாவட்டத்தில் நடைபெற்று வரும் தோட்டக்கலைத் துறை கண்காட்சியில், மியாஸகி மாம்பழம் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. மத்திய பிரதேசத்தில் விளைந்த இந்த மாம்பழங்களைப் பார்க்கும்போது நாவில் எச்சில் ஊறும். ஆனால், மாம்பழத்தின் விலையைப் பார்க்கும்போது கண்களிலிருந்து கண்ணீர் கொட்டும். காரணம், ஒரு மாம்பழத்தின் விலை ரூ.40 ஆயிரம். ஒரு கிலோ மியாஸகி மாம்பழத்தின் விலை (இளகிய மனம் படைத்தோர் இதயத்தின் மீது கை வைத்துக் கொள்ளுங்கள்) வெறும். ரூ.2.5 இலட்சம் (இந்திய ரூபாபடி) மட்டுமே.**

# தொடரும் சூடான் உள்நாட்டுப் போர்: அண்டைநாடுகளில் 13 இலட்சம் பேர் தஞ்சம்



சூடான் உள்நாட்டுப் போர் காரணமாக சுமார் 13 இலட்சம் பேர் அகதிகளாக அண்டை நாடுகளுக்குப் புலம்பெயர்ந்திருப்பதாக ஐ.நா. புலம்பெயர்வு ஏஜென்சி தெரிவித்துள்ளது.

சூடானில் அப்தெல் ஃபட்டா அல்-புர்ஹான் தலைமையிலான இராணுவத்துக்கும் முகமது ஹம்தான் டகாலோ தலைமையிலான ஆர்.எஸ்.எவ். துணை இராணுவப் படைக்குமிடையே கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் போர் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியா மேற்கொண்ட இராஜ்ஜிய ரீதியிலான முயற்சிகளுக்குப் பின்னர் இரு தரப்பினருக்குமிடையே சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடந்து வந்த பேச்சுவார்த்தையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கடந்த வார இறுதியில் மேற்கொள்ளப்பட்டது.

எனினும், தலைநகர் கார்ட்டூம் உள்ளிட்ட பகுதிகளில் அவ்வப்போது மோதல் தொடர்ந்து வருகிறது.

இந்நிலையில், ஐ.நா. புலம்பெயர்வு ஏஜென்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் சூடான் உள்நாட்டு யுத்தத்தால், இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் உடைமைகளைப் பறிகொடுத்து அகதிகளாக அருகிலுள்ள நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து வருகின்றனர், 190 குழந்தைகள் உட்பட 863 அப்பாவி மக்கள் இந்தப் போரால் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**விளையாட்டு செய்திகள்**
thamilansports@gmail.com

**TATA IPL**

**இன்றைய போட்டி**
குவாலிபையர் - 2
மும்பை எதிர் குஜராத்
நேரம் - இரவு 7.30
இடம் - அஹமதாபாத்

## சென்னையுடன் இறுதிப்போட்டியில் மோதப்போவது யார்?

# குஜராத் - மும்பை அணிகள் இன்று பலப்பரீட்சை



நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற எலிமினேட்டர் ஆட்டத்தில் லக்னோ அணிக்கு எதிராக மும்பை அணி 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இன்று குஜராத் அணியுடன் குவாலிபையர் - 2 ஆட்டத்தில் ஆடுகிறது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி நாளை மறுதினம் இறுதிப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸை எதிர்த்தாடவுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைக் குவித்தது. இதையடுத்து 183 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய லக்னோ அணி 16.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதனையடுத்து 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றிபெற்றது. மும்பை அணியில் 3.3 ஓவர்கள் பந்து வீசிய ஆகாஷ் மத்வால் வெறும் 5 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார்.



**வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கமு/கமு/மருதமுனை அல்-மதீனா வித்தியாலயம் இறுதிப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையை எதிர்த்து விளையாடி 3-0 என்ற அடிப்படையில் வெற்றியீட்டி வலய மட்ட சம்பியனானதுடன் மாகாண மட்டப் போட்டிக்கும் தெரிவாகியுள்ளது.**
**(றாசிக் நபாயிஸ்)**

# 24 ஆண்டு சாதனையை சமன் செய்த ஆகாஷ் மத்வால்



லக்னோ அணிக்கு எதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வீரர் ஆகாஷ் மத்வால் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அனில் கும்ப்ளே சாதனையை சமன்செய்துள்ளார்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பெரேரக் மான்கட், ஆயுஷ் பதோனி, நிக்கோலஸ் பூரன், ரவி பிஷ்னாய் மற்றும் மோசின் கான் ஆகியோரது விக்கெட்டைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார். அதுவும் 3.3 ஓவர்களில் வெறும் 5 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இந்த சீசனில் குறைவான ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

24 ஆண்டுகளுக்கு முன் ஆர்.சி.பி. அணியின் வீரரான அனில் கும்ப்ளே ராஜஸ்தான் அணிக்கு எதிராக 5 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

## எல்.பி.எல் தொடரின்போது மேட்ச் பிக்சிங்

# சர்ச்சையில் சிக்கிய மேற்கிந்திய தீவுகள் வீரர்



மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி வீரரான டெவோன் தோமஸ் சூதாட்ட சர்ச்சையில் சிக்கியுள்ளார். லங்கா பிரீமியர் லீக் டி10, லீக் கரீபியன் பிரீமியர் லீக் ஆகிய போட்டிகளில் விளையாடிய போது முறைகேட்டில் ஈடுபட்டதாக 7 பிரிவுகளில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் குற்றச்சாட்டைப் பதிவுசெய்துள்ளது.

இதில் 2021ஆம் ஆண்டில் லங்கா பிரீமியர் லீக்கில் கண்டி வாரியர்ஸ் அணிக்காக ஆடிய போது ஓர் ஆட்டத்தின் முடிவை மாற்றும் வகையில் மேட்ச் பிக்சிங்கில் ஈடுபட முயற்சித்தது முக்கிய குற்றச்சாட்டாக உள்ளது. இதையடுத்து அவரை இடைநீக்கம் செய்துள்ள ஐ.சி.சி. தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுள்ளது. ஐ.சி.சியின் ஊழல் தடுப்புப் பிரிவின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்புத்தருவோம் என்று வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வாரியம் அறிவித்திருக்கிறது. இனி அவரால் விளையாட முடியாது. முறைகேடு குறித்து 14 நாட்களுக்குள் பதிலளிக்கும்படி ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது.

# சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயம் 36 இடங்களைப் பெற்று சாதனை



**(மாளிகைக்காடு நிருபர்)**

சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளரும் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ.மலிக் தலைமையில் சாய்ந்தமருது அல்- ஜலால் மற்றும் பௌஸி மைதானங்களில் அண்மையில் நடைபெற்ற கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கோட்ட மட்டத்திலான பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு சாய்ந்தமருது கமு/லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய மாணவர்கள் மொத்தமாக 36 இடங்களைப் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.

கடந்த 2022 இல் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் 31 இடங்களைப் பெற்றுக் கொண்ட அப்பாடசாலை மாணவர்கள் இம்முறை (2023) 36 இடங்களைப் பெற்று சாதனை நிலை நாட்டியுள்ளனர். இதில் 10 முதலாம் இடங்கள், 13 இரண்டாம் இடங்கள், 13 மூன்றாமிடங்கள் உள்ளடங்குகின்றமை மட்டுமின்றி 12 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டத்தையும் தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

# தேசிய கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை விமானப்படை அணியினர் வெற்றி



இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த வாரம் நீர்கொழும்பு கடற்கரையில் இடம்பெற்றன. இந்தத் தொடரில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இலங்கை விமானப்படை அணியினர் வெற்றிக்கிண்ணத்தைத் தம்வசப்படுத்தினர்.

இதன்போது ஆடவர் பிரிவில் இலங்கை இராணுவ அணியை எதிர்கொண்ட இலங்கை விமானப்படை அணியினர் 3:2 என்ற கணக்கில் வெற்றியைத் தமதாக்கிக்கொண்டனர். அதேபோல் மகளிர் பிரிவில் இலங்கை கடற்படை அணியை 3:2 என்ற கணக்கில் வீழ்த்தி இலங்கை விமானப்படை மகளிர் அணியினர் வெற்றிபெற்றனர்.

இந்தப் போட்டிகளில் இலங்கையில் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டு வீர- வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7